Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

விஷானி நகை மாளிகை


இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (18.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 049













# இறுதிப் போரில் ஐ.நா.வின் செயற்பாடு ஸ்தம்பித்தது ஏன்?

## விளக்கவுள்ளார் பான் கீ மூன்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகங்கள் சுதந்திரமாகச் செயறபடாமல் போனமைக்கான காரணங்கள், அந்தச் சூழலுக்கான பின்னணி என்பன பற்றி அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான கூட்டத்தொடரில் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்க ஐ.நா. செயலர் உத்தேசித்துள்ளார்.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் மீதான ஐ.நா. பொதுச் செயலாளரின் உள்ளக மீளாய்வுக் குழு அறிக்கை எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றத் தவறியது குறித்த விபரங்கள் அடங்கிய உள்ளக விசாரணை அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் பான் கீ மூன் கடந்த புதன்கிழமை வெளியிட்டார்.

இந்த அறிக்கையின் பிரகாரம் பொதுமக்களின் உயிரிழப்புக் குறித்து ஐ.நா. சபை உரிய கவனம் செலுத்தவில்லை என சர்வதேச ரீதியில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளதால் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இதனை முன்வைத்து விவாதிக்க ஐ.நா.சபை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் ஐ.நா.வின் அலுவலகங்கள் அங்கு இயங்காமைக்கான காரணங்கள் மற்றும் ஐ.நா.வின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்தமை குறித்து சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு ஐ.நா.செயலர் விளக்கவுள்ளார்.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு


(நீர்வேலி)

நீர்வேலி வடக்குப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்றுக் காலை வயோதிபப் பெண் ஒருவருடைய சடலம் கோப்பாய்ப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் புனிதவதி (வயது-60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் இளைஞர் லண்டனில் கொலை



கடந்த சனிக்கிழமை இரவு 9.20 மணியளவில், லண்டனிலுள்ள லூசியம் நூல் நிலையத்துக்கு முன்னதாக தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். குறிப்பிட்ட தமிழ் இளைஞனை ஆபிரிக்க இனத்தவர் குழு ஒன்று தாக்கியதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன. இச் - சம்பவம் நடைபெற்றவேளை அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டதாக அருகில் உள்ள மக்கள் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்ட 22 வயது இளைஞர் ரெரி கிறிஸ்டியன் ஞானகுமார் என்று தற்போது

19 ஆம் பக்கம் பார்க்க

## காலமானார் பால்தாக்கரே



இந்தியாவின் தீவிரவாத இந்துத்துவக் கட்சியான சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே நேற்று மாலை காலமானார். கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. 86 வயதாகும் பால் தாக்கரே சுவாசக் கோளாறால் அவதிப்பட்டு வந்தார்.

இந்நிலையில் அவர் மாரடைப்பால் காலமானதாக மருத்துவர் குழு தெரிவித்துள்ளது. நேற்றுப் பிற்பகல் 3.30 மணி அளவில் அவர் உயிர் பிரிந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மும்பை பந்த்ராவில் பால்தாக்கரேயின் வீடான மடோஸ்ரீயிலேயே மருத்துவ சிகிச்சை பெற்று வந்த பால் தாக்கரே காலமானதைத் தொடர்ந்து, ராஜ் ராக்கரே உள்ளிட்ட உறவினர்களும், பல முக்கிய தலைவர்களும் பால் தாக்கரேயின் வீட்டுக்கு விரைந்துள்ளனர்.

பால்தாக்கரேயின் மறைவை அடுத்து மும்பை நகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## கூடங்குள அணு உலைக்கு எதிராக யாழ். நகரில் கவனயீர்ப்பு பேரணி

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசால் தமிழகத்தில் அமைக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணு மின் நிலையத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். நகரில் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முற்பகல் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கூடங்குளம் பகுதியில் அமைக்கப்படும்

19 ஆம் பக்கம் பார்க்க




## அழுத்தம் தரவுள்ள பெற்றியின் அறிக்கை

பிரித்தானியாவைச் சேர்ந்த ஐ.நா.வின் மூத்த அதிகாரியான சார்ள்ஸ் பெற்றி தயாரித்த அறிக்கையை கையிலெடுக்கவுள்ள சர்வதேச நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவுள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையில் இறுதி

19 ஆம் பக்கம் பார்க்க

## பரிதி படுகொலை விநாயகம் கைது



விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான விநாயகம், பிரான்ஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் ஒரு பிரிவிற்கு விநாயகம் தலைமை வகிக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் மற்றுமொரு சிரேஷ்ட தலைவரான பரிதி எனப்படும் றீகன் கொலைச சம்பவத்துடன் தொடர்புடைய சந்கேத்தின் பேரில் விநாயகம் கைது செய்யப்பட்டுள்ளார். பிரான்ஸின் பாரிஸ் பொலிஸார் விநாயகத்தை கைது செய்துள்ளனர். ஐரோப்பாவில் செயற்பட்டு வந்த புலிகளின் வலை

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுமி மீது துஷ்பிரயோகம் 2 பிள்ளைகளின் தந்தை கைது

(சுன்னாகம்)


சுன்னாகம் மதவடிப் பகுதியில் 14 வயதுச் சிறுமி மீது பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்ட 2 பிள்ளைகளின் தந்தையொருவர் அப்பகுதி மக்களினால் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டவராவார்.

இதேவேளை, பாலியல் வல்லுறவு முயற்சிக்கு இலக்காகி மயக்கமடைந்த நிலையில் குறித்த சிறுமியும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீளக்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொமிகிறரோ கோபே வாழ்வாதார உதவித்திட்டத்தை ஆரம்பித்துவைத்துள்ளார்

யாழ்.கீரிமலை வலித்தூண்டல் அன்னமாள் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற வாழ்வாதார உதவித்திட்டங்கள் கையளிக்கப்பட்டது. கடற்றொழிலாளர்களுக்காக கட்டுமரங்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டது

10 கடற்றொழிலாளர்களுக்கு 4,228,780 இலட்சம் ரூபா இந்த வாழ்வாதார உதவித்திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர்களுக்கான உதவித்திட்ட கையளிப்பு வைபவத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொமிகிற்ரோ கோபே அவரின் பிரதிநிதி யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிதராஜ், இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்.நீரியல் வளத் திணைக்களப்பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிறிமோகன், பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்

## மாணவர் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.செந்தில்வேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். (109)

## உணவுப் பொருட்கள் திருட்டு மதிய உணவு வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உணவுப் பொருட்கள் திருட்டினால் ஒருநாள் மதிய உணவு மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது, கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பாடசாலை அறைக்குள் இருந்த சுருக்கு கேற்றினை உடைத்து உள்ளே வைக்கப்பட்டிருந்த அரிசி, தேங்காய், எண்ணெய் போன்ற மாணவர்களுக்கான மதிய உணவுப் பொருட்கள திருடர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர்களும், நலன் விரும்பிகளும் பாடசாலை அதிபரிடம் கேட்டபோது அப்படி எதுவும் நடைபெறவில்லை என தெரிவித்ததாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது சம்பந்தமாக பாடசாலை மாணவர்களிடம் கேட்டதற்கு களவு போனது உண்மை என்றும், இதன் காரணமாக ஒரு நாள் மதிய உணவு தரவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த திருட்டு சம்பவம் புரியாத புதிராக இருப்பதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(நெல்லியடி)

பைங்கூரன், உடுப்பிட்டி எனும் முகவரியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தை நேற்றுக் காலை அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குபேந்திரன் சதீஸ்வரன் (வயது - 28) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி பா.சுசீந்திரசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (116)

## முகாமைத்துவப் போட்டியில் சாவகச்சேரி நகரசபை முதலிடம்

(சாவகச்சேரி)

மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் உள்ளூராட்சி சபைகளுக்கிடையே 2011 ஆம் ஆண்டு நடத்திய முகாமைத்துவப் போட்டியில் சாவகச்சேரி நகரசபை மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும், மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இதற்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

## கடலுணவுக் கழிவுகளால் அசௌகரியப்படும் மக்கள்

(குருநகர்)

பழுதடைந்த கடலுணவுக் கழிவுகளால் குருநகர் - ஐஸ் பிளான்ட் வீதி மற்றும் சின்னக்கடைப் பகுதிகளில் முகம் கொடுக்க இயலாத அளவுக்கு துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஐஸ் பிளான்ட் வீதிப்பகுதியில் அமைந்துள்ள கருவாட்டு உற்பத்தி குடில்களில் தேக்கப்படும் கடலுணவின் கழிவுப் பாகங்கள் காலங்கடந்து அகற்றப்படுவதால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசிவருகிறது.

அதேவேளை யாழ்.மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் வாகனத்தில் எடுத்துச் செல்கையில் வாகனங்கள் சென்ற வீதிகளில் சில நிமிடங்களுக்கு அந்த நாற்றம் அகலாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாகனம் சின்னக் கடைக்கு வந்து அங்கேயும் தேங்கும் கடலுணவுக் கழிவுகளை எடுத்துச் செல்லும் வரையில் துர்நாற்றத்தால் அப்பகுதி மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

பழுதடைய முன்பாக அவற்றை அவ்விடங்களிலிருந்து எடுத்துச் சென்றால் இந்த அவலங்கள் தோன்றுவதைத் தடுக்க முடியுமென்று அபிப்பிராயம் கூறப்படுகிறது. (68)

## எரிகாயங்களுக்கு இலக்கான இளம் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

இராசேந்திரன் பத்மினி (வயது - 34) கரவெட்டி இந்திரா அம்மன் கோயிலடி துன்னாலையைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 12 ஆம் திகதி எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் மாலை 6.00 மணிக்கு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## டெங்கு நோய் தொற்றுக்கு இலக்காகி மேலும் அறுவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்த் தொற்றிறுக்கு இலக்காகி அறுவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்புப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் இருந்து மூவரும், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிலிருந்து தலா ஒவ்வொருவருமாக மொத்தம் அறுவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இவ் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய ஏழு பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் சித்தியடைந்த மாணவர்களுக்கு கௌரவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த 5 ஆம் தர புலமைப்பரில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தென்மராட்சி கலை மன்றத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ கழக 306 B-1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்ணாண்டோ கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 B-1 மாவட்ட உதவிச் செயலாளர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், பிரதிப் பொருளாளர் லயன் கே.எஸ்.பத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தலிங்கம் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவநாயகம், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ஸ்ரீகந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக லயன் மாவட்ட ஊடகப் பிரிவுத் தலைவர் எஸ்.கே. நவரத்தினம் தெரிவித்தார். (11)



ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு வேலணை தெற்கு ஜே.17 கிராம சேவகர் ஆர்.குலசிங்கம் தலைமையில் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்திலும், துறையூர் ஐயனார் சிறுவர் பாடசாலையிலும் மரநடுகை நிகழ்வு இடம்பெறுவதையும், அருகில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களையும் காணலாம். (138)


## தவறிவிட்டது

சின்னத்துரை முரளிதரன் ஆகிய எனது 853653756V இலக்க தேசிய அடையாள அட்டை கடந்த 1 ஆம் திகதி பஸ்ரியன் சந்திக்கும் இராசாவீதி கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

க.கந்தசாமி,
இராச வீதி, கோப்பாய்.
தொலைபேசி: 0770044835
(C/215)

# கொக்கிளாய் கடல் நீரேரிப்பகுதியில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி

## மீனவர்களின் தொழில் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் கடல்நீரேரிப் பகுதியில் தொடர்சசியாக இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் இப்பகுதியில் நாளாந்தம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடல் நீரேரிப் பகுதியில் திருகோணமலை புல்மோட்டை மீனவர்களும் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் தொழில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதாக இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கடல் நீரேரிப் பகுதியில் தொடர்ச்சியாக முல்லைத்தீவு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 500 குடும்பங்கள் தொழிலை மேற்கொண்டு வரும் நிலையில் இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் தாம் தொழில செய்ய முடியாது வாழ்வாதார ரீதியாகக் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இச்சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் மீன்வளம் பாதிக்கப்படுவதாகவும், இரசாயனக் கழிவுகள் கடற்கரைப் பகுதியில் படிந்து காணப்படுவதாகவும், இதனால் மீனின் வளர்ச்சி குன்றுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சிறிய கடல் நீரேரிகளில் 22 அடிக்கு மேல் இயந்திர வள்ளம் பயன்படுத்தக் கூடாது அரை அங்குலத்துக்குக் குறைவான கண் அளவைக் கொண்ட வீச்சுவலையும் 2 அங்குலத்துக்கும் குறைவான கண் அளவைக் கொண்ட விடுவலையும் பயன்படுத்த வேண்டும். ஏனைய வலைகளைப் பயன்படுத்த முடியாது என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் புல்மோட்டை மற்றும் முகத்துவாரப் பகுதி மீனவர்களின் தொடர்ச்சியான மீன்பிடி நடவடிக்கை குறித்து முல்லைத்தீவு நீரியல் வளத் திணைக்களத்திடமும் அரச அதிபரிடம் தெரியப்படுத்திய நிலையில் அம் மீனவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்திய பின்னரும் மீண்டும் இம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கடல் நீரேரிப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை முற்றாகத் தடைசெய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04)

# கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கனடா வன்னிப் பட்டறையும் கன்டா தமிழ் சமூக கலாசார அமைப்பும் இணைந்து கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

இக்கிராமத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் கல்வி கற்று வரும் 142 மாணவர்களுக்கு முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இம்மாணவர்கள் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு இலகுவாக அமைந்துள்ளதாக மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (04)



ஜனாதிபதியின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கங்காரா மரம் நடுவதைக் காணலாம். (18)

# வத்திராயன் கிராமத்தில் வீட்டுத்திட்டம் ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் (SBC) வடமராட்சி கிழக்கில் 3 கிராமங்களில் வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் உடுத்துறை, ஆழிய்வளை, வத்திராயன் கிராமங்களில் இந்நிறுவனம் வீட் டுத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் வத்திராயன் கிரா மத்தில் மேற்படி நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத் தருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் காரணமாக அக் கிராமத்தில் வீட்டுத்திட்டம் தற்கா்லிகமாக நிறுத்தப்பட்டிருநதது.

அதன் பின்னர் கடந்த 11 ஆம் திகதி குறித்த நிறுவனத்தின் நிறுவனப் பணிப்பாளர் பொது முகாமையாளர் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன் ஆகியோர் நேரடியாக வத்திராயன் கிராமத்திற்கு வருகை தந்து வீட்டுத்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்ட பயனாளிகள் அனைவரையும் அழைத்து ஒரு கலந்துரையாடலை நடத்தியதுடன் நிறுத்தப்பட்ட வீட்டுத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆராய்ந்தனர்.

இதன்போது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரை மாற்றி புதிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்பின்னர் கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை நிறுத்தப்பட்ட வீட்டுத்திட்ட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (38)

# வெடிகுண்டைக் கண்டால் எங்களிடம் சொல்லுங்கள்

## பாதுகாப்பு படையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தின்போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் மழை வெள்ளம் காரணமாக அடித்துச் செல்லப்படும் ஏது நிலை தோன்றியிருப்பதனைத் தொடர்ந்து அத்தகைய வெடிபொருட்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு படையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புக்களை விடுத்து வருகின்றனர்.

யுத்த காலத்தின்போது வட பகுதியின் பல்வேறு மாவட்டங்களின் பகுதிகளில் இவ்வாறு வெடிபொருட்கள் நிலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றது. அது தவிர அடையாளம் காணப்படாத பல்வேறு பகுதிகளில் இன்னமும் வெடிபொருட்கள் நிலத்தில் புதையுண்டு இருக்கின்றமை காரணமாக தற்போதைய மழைகால சூழ்நிலையில் மழை வெள்ளத்தினால் இத்தகைய வெடி பொருட்கள் அடித்துச் செல்லப்படும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறாக வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் வெடி பொருட்களை அருகில் உள்ள கிராமங்க்ளில் உள்ள பொது மக்கள் அதாவது சிறுவர்கள் எடுத்து வந்து விளையாடுவதும், பரீட்சித்துப் பார்ப்பதன் காரணமாக அவை வெடித்து பாரதூரமான இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்ற சம்பவங்களும் நடைபெற்றுள்ளது.

எனவே, அத்தகைய வெடி பொருட்கள் குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்குமாறும் தமது பகுதிகளில் அத்தகைய பொருட்கள் இருக்கும் பட்சத்தில் அருகில் உள்ள இராணுவ முகாமிற்கோ அல்லது வெடிபொருட்களைக் கையாளும் நிறுவனங்களுக்கோ தெரியப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

படையினர் ஒலிபெருக்கி வாயிலாக இத்தகைய அறிவுறுத்தல்களை விடுத்து வருகின்றனர்.(பா)

# சாயி சேவா நிலையத்தில் மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியில் உள்ள சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஓங்காரம், காயத்திரி ஜெபம், பிரசாந்திக் கொடியேற்றம், வேதபாராயணமும் காலை 9.00 மணிக்கு திருவிளக்கு பூசையும், 10.45 மணிக்கு பெண்ணின் சிறப்பு அலுவலகத்திலா? இல்லத்திலா? ஆன்மீகத்திலா? என்னும் விடயம் பற்றி ஸ்ரீமதி செல்வி ஜெயமோகன் சிறப்புச் சொற்பொழிவு, பொன்னம்மா கிராம மாணவிகளின் நடனம், ஒன்பது ஒழுக்கக் கோவைகள், நிலைய மகளிரின் நாட்டிய நாடகம் பாரதிபுர மாணவிகளின் கோலாட்டம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

திருவிளக்கு பூசை செய்ய விரும்புவோர் குத்துவிளக்கு, திரி, எண்ணெய், பூ அல்லது குங்குமம், தட்டு என்பன கொண்டு வருமாறு நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.



யாழ். கார்மேல் முன்பள்ளி பாடசாலையின் பெற்றோர் தின விழா அண்மையில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெற்றபோது மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (எஸ்.பி)

இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பிரம்மச்சாரியம் அவசியம். ஏனெனில் உடல் மீதான ஆசை ஒழிந்தாலன்றி ஆத்மானந்தம் கிடையாது.

- ஸ்ரீ சாரதாதேவி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மானுடம் தன்னைத் தேடும் கல்வி!

பாடப்புத்தகங்களும் படிப்பும் சடங்காக மாறிவிட்ட அல்லது மாற்றிக்கொண்டுவிட்ட சூழலில் வாழ்கிறோம். படிப்பு என்பது வயிற்றுக்கு சாப்பாடும், வாழ வசதியும் பெற்றுத்தரும் ஒரு தொழிலுக்கான கடவுச்சீட்டு என்கிற முறையில் நம் கல்வி முறை உருவானதால் ஏற்பட்டுள்ள சீர்கேடு இது.

கல்வி வெறும் வாழ்க்கையின் வசதி என்பதற்கான கடவுச்சீட்டல்ல, பிரபஞ்ச அதிசயங்களை உணர்ந்து கொள்ள அதன் மர்மங்களில் பிரயாணிக்க ஒரு துடுப்பு என்பதனை மாணவர்களை உணரச் செய்யவேண்டும். அதற்கு அறிவியல் கல்வி இன்று கொண்டுள்ள நிலைப்பாட்டினையே மாற்றியமைக்க வேண்டும்.

சி.பி.ஸ்னோ என்கிற அறிவியல் வரலாற்றறிஞர் அறிவியலுக்கும் சமுதாய அறிவுப்புலங்களுக்கும் இடையில் விரிந்து கொண்டு போகும் அபாயகரமான பிளவினைக் குறித்துக் கூறியுள்ளார். அந்த அபாயகரமான பிளவு நம் சமுதாயத்தை வெறும் சுயநலச் சமூகமாக மாற்றியிருப்பது மட்டுமல்லாமல் புதிய சிந்தனைகளை நாடவோ தேடவோ விரும்பாதவர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

பாடசாலைக்கு வெளியே விரிந்து கிடக்கும் வாழ்வு பற்றி எதுவும் உணர்த்தும் திறனில்லாக் கல்வியைக் கரைத்துக் குடித்துவிட்டு வெளியேறும் நம் இளைஞர்கள், நமக்கு வெளியேயுள்ள சமூகங்கள் பற்றியோ உலகங்கள் பற்றியோ பார்வையின்றி ஒற்றைப் போக்குச் சிந்தனைகளுடன் சுருங்கிவிடுகிறார்கள். இயற்கை வளங்களையும் அதனுடன் தன் வாழ்வு பின்னிப்பிணைந்து கிடக்கும் முறைகளையும் உணராமல் பாடசாலைகள், பல்கலைகளிலிருந்து வெளிவந்து பட்டங்களை மட்டும் பெறுபவர்களாகிறார்கள்.

இவர்களில் பலருக்கு அறிவியல் என்பது முழுக்க முழுக்க மேற்கத்திய நாகரிகம்சார் விஷயம். ஆடைகள், அழகுசாதனங்கள் போல தங்களை மற்றவர்களிடமிருந்து உயர்த்திக் காட்டவும் பீற்றிக் கொள்ளவுமான ஓர் அடையாளம் மட்டுமே. எனவே அறிவியல் மனப்பான்மையோ சமூக மனப்பான்மையோ வளராமல் ஆவேசம் - வெறுப்பு - வன்முறை மனப்பான்மைகளையே வளர்த்தவர்களாக உள்ளார்கள். இப்படித்தான் 'படித்தவர்களை'யும் 'அறிவாளிகளை'யும் கொண்ட நம் சமூகம் அழிவைத் தடுக்கவோ, அழிவிலிருந்து மீளும் வழிகளைக் காணவோ, அடுத்த சமூகங்களுக்கு இணையாக நகரவோ முடியாமல் அல்லாடுகிறது.

அறிவுடையோர் என்று சொல்லிக் கொள்ள முடிவதன் பொருள், அவர்கள் புதிய காலத்திற்கும் புதிய மாற்றங்களுக்கும் ஏற்ப மனித நடத்தைகள் ஒழுங்குகளைச் சூழலுடன் பொருத்தித் தெரிந்து கொள்கிறார்கள் என்பதே. அறிவியலின் அடிப்படையாக இருப்பது தேடல். தேடல் மானுடத்தின் முக்கிய வேட்கைகளில் ஒன்று. உணவை, பொன்னை, பொருளை, இணையைத் தேடி ஓடும் மானுடம் தன்னையும் தேடுகிறது. தன் தோற்றத்தை, தன்னைக் கொண்டிருக்கும் பூமியின் தோற்றத்தை, பூமியில் தன் வாழ்வின் தன்மையை அது தேடுகிறது.

தேடலை ஊக்குவிப்பதான கல்வியே நமக்கு முக்கியம். "நம்முடைய முன்னோர்களுக்கு அணுத்துகள்கள் குறித்த அறிவு இருந்தது" என்பது போல போலியான பெருமிதங்களிலும், நமது சிந்தனைக்கப்பால் சரி எதுவுமில்லை என்ற கர்வ உணர்வுகளிலும் தேங்கிவிடுவது நம் பார்வையைக் குருடாக்கிவிடும். அறிவியல் கற்கை என்பதும் நாம் சமூகத்தை, உலகத்தை, இன்றுலக யதார்த்தத்தைப் புரிந்தவர்களாக விரிவடைவதற்கே உதவ வேண்டும். அறிவியல் என்பது தொழில்நுட்பம் சார்ந்ததில்லை, பார்வையும் அறிதலும் சார்ந்தது.

– ஆசிரியர்

# தொழில் சந்தையில் சீன ஆதிக்கம்

# அரசு மீது கணை தொடுக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

நாட்டின் தொழில் சந்தையில் சீனர்களுக்கு அரசு அதிக வாய்ப்பை வழங்கும் அதேவேளை, பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்காமல் ஓரங்கட்டி வருவதாக அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதனால் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை உக்கிரமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே இளைஞர்கள் உயிரைப் பணயம் வைத்து அவுஸ்ரேலியாவிற்கு படகு மூலம் செல்கின்றனர்.

தெற்கில் 1500 இளைஞர்களைக் காணவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பலர் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்கு சென்றுள்ளனர்.தமிழ், சிங்கள பேதமின்றி உயிரை பணயம் வைத்து இளைஞர்கள் அவுஸ்ரேலியா நோக்கிப் பயணம் செய்கின்றனர். இது ஓர் பாரதூரமான பிரச்சினையாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், நுரைச்சோலை அனல் மின் நிலையம் போன்ற பல்வேறு அபிவிருத் திட்டங்களில் சீனர்களே அதிகளவில் பணியாற்றி வருகின்றனர்.

சீன நாட்டு செல்வந்தர்கள் இலங்கைக்கு வந்து இலாபமீட்டிச் செல்கின்றனர்.

சீனா இலங்கையிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில்லை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளே இலங்கையிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்கின்றன.

மேற்குலக நாடுகளுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வெளிவிவகார அமைச்சர் முயற்சி எடுத்த போதிலும், ஆளும் கட்சியின் சில அமைச்சர்கள் மேற்குலக நாடுகளைக் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும், எனினும் அரசாங்கம் இந்த விடயத்தில் ஆர்வம் காட்டத் தவறியுள்ளது என லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

## கசிவுக்கு காரணம் என்ன? விசாரணைகள் ஆரம்பம்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பாக பொலிஸார் விசேட விசாரணையை ஆரம்பித்துள்ளதாக பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிடுகிறார்.

தற்போது செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ள விமானங்களுக்கான எரிபொருளைச் சுத்திகரிக்கின்ற இயந்திரங்களின் திருத்தவேலைகளின்போது ஏற்பட்ட வாயுக்கசிவு காரணமாகவே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

துரதிஷ்டவசமாக இந்தச் சம்பவத்தில் இரண்டு ஊழியர்கள உயிரிழந்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், இதன்போது உதவிக்குச் சென்ற ஊழியர்கள் சிலரும் அனர்த்தத்திற்கு உள்ளாகியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தேசிய வைத்தியசாலையின் அவசர கண்காணிப்பு பிரிவில் இருவரும் திடீர் விபத்துப் பிரிவில் நால்வரும் சிகிச்சை பெற்று வருவதாகவும், மேலும் ஐவர் இராகமை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணிப்பாளர் நியமனம்

முல்லைத்தீவு வலய பிரதிக்கல்விப்பணிப்பாளராக கிறிஸ்தோப்பர் கமலராஜன் வடமாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் மேற்படி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய மா. இராஜ்குமார் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதை அடுத்தே பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்திற்கு கிறிஸ்தோப்பர் கமலராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 6 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## மண்டைதீவுக்கு மின்சாரம் எப்போது கிடைக்கும்

(மண்டைதீவு)

மண்டைதீவுக்கு மின்சாரம் வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்ட காலக்கெடு அடுத்த மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இருந்தபொழுதும் துரிதமாக நடைபெற்று வந்த மின் கம்பம் நடுதலைத் தொடர்ந்து மின் கம்பிகளை இணைக்கும் செயற்பாடும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது அதுவும் திடீர் என நின்றுபோயுள்ளது.

அரைகுறையாக 'இழுக்கப்பட்ட காப்பிப்படாத கேபிள்கள் தொங்கவிடப்பட்டும், நிலத்தில் இழுபட்டும் காணப்படுகின்றன.

வீதியின் ஓரத்தில் நின்ற பனை மரங்கள் வெட்டப்பட்ட வேகத்தில் கம்பிகளும் மாபிள்களும் பொருத்தும் வேலை கச்சிதமாக நடைபெறும் என கனவு கண்டவர்கள் இலவு காத்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சில இடங்களில் (கடலில்) கம்பங்களும் நடப்படவில்லை.

இந்த வருடத்துள் மின்சாரம் மண்டைதீவை வெளிச்சத்துக்கு கொண்டு வருமா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (23)

## பேஸ்புக் மூலம் மதங்களை இழிவுபடுத்தினால் நடவடிக்கை

(கொழும்பு)

பேஸ்புக் மூலமாக மதங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தினால் சூத்திரதாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதங்களை இழிவுபடுத்தும் வகையிலான பேஸ்புக் கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கணனி அவசர சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

மதங்களை இழிவுபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட பேஸ்புக் கணக்குகள் தொடர்பில், பேஸ்புக் தலைமைக் காரியாலயத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் குறித்த கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் முக்கிய மதத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கு இழிவு ஏற்படும் வகையில் சில பேஸ்புக் கணக்குகளில் தகவல்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்காலத்தில் இவ்வாறு தனிப்பட்ட நபர்களையும், மதங்களையும் இழிவுபடுத்தும் பேஸ்புக் இணையக் கணக்குகள் முடக்கப்படும் என இலங்கை கணனி அவசர சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அடிப்படைத் தேவைகள் பூர்த்தி பட்ஜெட் குறித்து புகழாரம்

நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் புரிந்து கொண்டு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மாணவ சமூதாயத்தின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவி வந்த ஆசிரியர் பற்றாக் குறைக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையை மேம்படுத்த ஜனாதிபதி எடுத்து வரும் முயற்சிகளுக்கு எமது கட்சி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் கூடுதலாக தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர். மலையகப் பிரதேச இளைஞர், யுவதிகள் வேலையில்லாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு மிகவும் சொற்பளவிலான நலன்களே கிடைக்கின்றன.

தோட்டப் பகுதி வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பெற்றுள்ளது. இந்த வைத்தியசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் இருந்த போதிலும் ஆளணி வசதி மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பதின்மூன்றாவது திருத்தத்துக்கு என்ன நடந்தாலும்

# ஐ.தே.க. ஆட்சிக்கு வருவதே கூட்டமைப்பின் இலக்கு

**சங்கர சிவன்**

**பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியைக் கண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இக்கண்டனங்கள் மாத்திரம் அம்முயற்சிக்கு எதிரான செயற்பாடாக மாட்டா. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் கூட்டாகச் செயற்படுதல், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு பற்றிப் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் வெறும் கண்டனங்களிலும் பார்க்க முக்கியமானவை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை.**

**அறுபது** வருடங்களுக்கு மேலான அரசியல் வாழ்க்கையில் தமிழ் பேசும் சிறுபான்மை யினருக்குக் கிடைத்த ஒரே யொரு நன்மை மாகாண சபை மாத்திரமே. அதிகாரப் பகிர்வின் ஆரம்பமாக மாகாண சபை யைக் கொள்ளலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறு கின்றனர். மாகாண சபையை வெறும் எலும்புக்கூடு என்று இருபத்தைந்து வருடங்களாக ஒதுக்கிய கூட்டமைப்புத் தலைவர்கள், அது மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குகின்றது என்றும், தமிழ் மக்களுக்குச் சிறிய அளவில் நன்மையைச் செய்கின்றது என்றும் இப்போது கூறுகின்றனர். அரசாங்கத்துடன் இணைந்திருப்பவர்களும் அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களுமான சிலர், பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்ற காலத்திலேயே கூட்டமைப்பு மாகாண சபை பற்றிய அதன் நிலைப்பாட்டை மாற்றியிருக்கின்றது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் முன்னோடியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தவறான முடிவுகளை எடுப்பதும், வெள்ளம் மூக்கு வரை வந்த பின்னரே அந்தத் தவறை ஒத்துக் கொள்வதும் வழக்கமாகிவிட்டது. மாகாண சபை விடயத்தில் விட்ட தவறை இருபத்தைந்து வருடங்களுக்குப் பின் இப்போது ஒத்துக்கொள்கின்றார்கள். ஆனால், இவர்கள் அன்று விட்ட தவறு தமிழ் மக்களின் நலன் மீது கைவைக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. தமிழ்த் தலைவர்கள் ஆரம்பத்திலேயே மாகாண சபையை ஏற்றிருந்தால், அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற குற்றச்சாட்டைப் பேரினவாதிகள் முன்வைத்திருக்க முடியாது. தமிழ்த் தலைவர்கள் பிரிவினையை நிராகரித்து மாகாண சபையை ஏற்றார்கள் என்பது பேரினவாதிகளின் கோரிக்கையைப் பலவீனப் படுத்தியிருக்கும்.

விட்ட தவறுகள் போகட்டும். மாகாண சபையை ஏற்கும் நிலைக்கு இப்போது வந்திருக்கும் கூட்டமைப்புத் தலைவர்கள், பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் முயற்சிக்கு எதிரான ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்களா என்ற கேள்விக்கு எதிர்மறையான பதிலே கிடைக்கின்றது. மாகாண சபையைத் தாங்கள் ஏற்கவில்லை என்று அடிக்கடி கூறுகின்றார்கள். ஏற்கவில்லை என்றால் ஏன் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டீர்கள்? வடமாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று ஏன் கோரிக்கை விடுக்கின்றீர்கள்? மாகாண சபையை நீங்கள் ஏற்கவில்லையென்றால் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதை ஏன் எதிர்க்க வேண்டும்?இதுதான் கூட்டமைப்புத் தலைவர்களின் போலி அரசியல்.

மாகாண சபை மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைத் தருகின்றது என்பதற்காகவும், தமிழ் மக்களுக்குச் சிறிய அளவிலாவது நன்மை கிடைக்கின்றது என்பதற்காகவும் படிப்படியாக அரசியல் தீர்வை அடைவதற்கான அடிப்படை அமைப்பு என்பதாலும் மாகாண சபையை இவர்கள் ஏற்கின்றார்கள். அதனாலேயே மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது என்ற முடிவை எடுத்திருக்கின்றார்கள். அதே நேரம் வெளிநாடுகளில் இருக்கும் சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக மாகாண சபையை ஏற்கவில்லை என்று இடைக்கிடை அறிக்கைகள் வெளியிடுகின்றார்கள்.

இந்த இரட்டை நாக்கு அரசியல் தமிழ் மக்களுக்குத் தீங்கு விளைவிக்குமேயொழிய நன்மை தரப்போவதில்லை. தமிழ் பேசும் மக்களின் இன்றைய தேவை பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பது. இத்திருத்தத்தை நீக்குவது உறுதியாகிவிட்டால், புதிய திருத்தத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரதான அம்சங்களை உள்ளடக்குவதற்குக் கூட்டமைப்பு தயாராக இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனத்துக்காகப் பயன்படுத்துகின்றார்களேயொழிய அரசியல் தீர்வுக்காகவோ பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகவோ பயன்படுத்தவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிராக ஏற்பாடு செய்யப்படும் ஊடகவியலாளர் சந்திப்புகளில் அரசாங் கத்துக்கு எதிரான கண்டனங்களை வெளியிடுகின்றார்களேயொழிய ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதில்லை.

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியைக் கண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இக்கண்டனங்கள் மாத்திரம் அம் முயற்சிக்கு எதிரான செயற்பாடாக மாட்டா. பதின்மூன்றாவது திருத்தத் தைப் பாதுகாக்கும் நிலைப் பாட்டை மேற்கொண்டுள்ள கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் கூட்டாகச் செயற்படுதல், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றிப் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் வெறும் கண்டனங்களிலும் பார்க்க முக் கியமானவை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை.

ஒன்பது கட்சிகளைக் கொண்ட எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்பொன்றை ஐக்கிய தேசியக் கட்சி அமைத்திருக்கின்றது. ஐக்கியதேசியக் கட்சியை ஆட்சிக் கதிரையில் அமர்த்துவதுதான் இந்த எதிர்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரதான நோக்கம். இக்கூட்டமைப்பில் தமிழ் மக்களின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் அங்கம் வகிக்கின்றன, எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் ஐக்கிய தேசியக் கட்சி பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்கும் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் நாடாளுமன்றத்துக்கு மேலான அதிகாரங்களை மாகாண சபை கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளியிட்டிருக்கும் அறிக்கை பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் என்பதை வெளிப்படுத்துகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் எந்த மாற்றமும் அத்திருத்தத்துக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதாக இருக்க வேண்டுமேயொழிய, ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைப்பதாக இருக்கக்கூடாது என்று மனோ கணேசன் தெரிவித்த கருத்துக்கு, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிரணிக் கூட்டமைப்பின் ஐந்து கட்சிகள் ஆதரவளிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பதின்மூன்றாவது திருத்தத்தின் சில அதிகாரங்கள் நீக்கப்பட்டு வலுக்குறைப்புச் செய்யப்படும் என்பதே இதன் அர்த்தம்.

இந்தநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிரணிக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப்போகின்றன என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்காக அந்த அணியில் தொடர்ந்து அங்கம் வகிக்கப் போகின்றார்களா? அல்லது அந்த அணியிலிருந்து வெளியேறிப் பதின்மூன்றாவது திருத்தத்தை அதன் முழுமை சிதையாமல் பேணுவதற்குத் தயாரான கட்சிகளுடனும், அமைப்புகளுடனும் இணைந்து பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்குச் செயற்படப் போகின்றார்களா?

போகிற போக்கைப் பார்த்தால், பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வ நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இல்லையென்றே தோன்றுகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்ட அனைத்து சக்திகளுடனும் இணைந்து பொது அணியாகச் செயற்படும் நோக்கம் இக்கட்சிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் ஆலோசனையை மையமாக வைத்து அரச எதிர்ப்பு உணர்வலையைத் தமிழ் மக்களிடம் வளர்ப்பதும் அந்த உணர்வலையை ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாகத் திருப்புவதுமே இவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பதின்மூன்றாவது திருத்தத்தை வெட்டிக் குறுக்கி வலுவிழக்கச் செய்யும் என்பதையிட்டு, இவர்களுக்குச் சிறிதளவும் கவலை இல்லை. பதின்மூன்றாவது திருத்தத்துக்கு என்ன நடந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்பதே இவர்களின் இலக்கு.

# மகிந்தவின் ஆட்சியை வேருடன் அகற்ற எனக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும்





ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக செயற்படுவதற்கும் பொது எதிரணியை அமைத்து ஆட்சியை மாற்றி அமைப்பதற்காக போராடுவதற்கும் எனக்கு பூரண அரசியல் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தன்னை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு, தான் டிரான் அலஸிற்கு முன்வைத்த நிபந்தனைகள் இதுவரையும் நிறைவேற்றப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனது விடுதலை பற்றி பேசுவதற்கான சில வழிகள் தெரிவதாகவும், தான் பேச்சுவார்த்தையை தொடங்கலாமா என டிரான் அலஸ் என்னிடம் கேட்டார். அப்போது நான் சில நிபந்தனைகளை விதித்தேன் என்றார்.

எனது சிவில் உரிமைகள், நான் பெற்ற இராணுவ கௌரவங்கள் என்பன மீளளிக்கப்பட வேண்டுமென்பது எனது நிபந்தனைகளில் அடங்கியிருந்தது என பொன்சேகா கூறினார்.

பின்வரும் நிபந்தனைகள் ஏற்கப்பட்டால் அவரை பேசும்படி கூறினேன். நான் விடுவிக்கப்பட்டால் எனக்கு பூரண அரசியல் சுதந்திரம் இருக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ என்னிடமிருந்து பறித்த எனது பதவிநிலை, எனது பதக்கங்கள், ஓய்வூதியம், எனது குடும்பத்திடமிருந்து பறித்த ஏனைய விடயங்களையும் ராஜபக்ஷ எனக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளையும் மீளப் பெற வேண்டும்.

எனக்கு ராஜபக்ஷவுக்கு எதிராக அரசியலில் ஈடுபட முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். நான் ஒருபோதும் அரசாங்கத்துடன் சேர மாட்டேன். இவையே எனது நிபந்தனைகளாக இருந்தன என்று அவர் கூறினார்.

தனது நிபந்தனைகளின் அடிப்படையில் டிரான் அலஸ் பேசுவதற்கு ஒப்புக்கொண்டாரென பொன்சேகா கூறினார். இந்த நிபந்தனைகளின் கீழ் பேசுவதாக டிரான் அலஸ் கூறினார்.

அவர் எட்டு மாதங்களாக என்ன பேசினார் என்பது எனக்குத் தெரியவில்லை. இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமல் நான் சிறையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன்.

அவரது பேச்சுவார்த்தை வெற்றிகரமானது என நான் நினைக்கவில்லை. நான் சிறையிலிருந்து வெளித்தள்ளப்பட்டமையால் எனக்கு நீதி கிடைத்தது என ஆகாது.

இதன் மூலம் அவருக்கு துரோகம் இழைக்கப்பட்டது என அவர் நினைக்கின்றாரா? என பொன்சேகாவிடம் கேட்டபோது, அவர் இல்லை என கூறினார்.

நான் அப்படிச் சொல்ல மாட்டேன். டிரான் அலஸ், தன்னால் இயன்ற முழுவதையும் செய்திருக்கலாம். அவருக்கு அநீதியிழைக்க மாட்டேன். ஆனால், நான் எதிர்ப்பார்த்ததை அவர் செய்யவில்லை.

தற்போது அவரது அரசியல் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிரிவினை பற்றி கருத்து கூறிய பொன்சேகா, தான் சலிக்கமாட்டேன் எனவும் மக்களுக்காக தொடர்ந்து பாடுபடுவேன் எனவும் முழு அரசியல் கலாசாரத்தையும் மாற்றிவிடும் ஓர் அரசியல் இயக்கத்தை தன்னால் தோற்றுவிக்க முடியும் என நம்பிக்கை இருப்பதாகவும் கூறினார்.

தற்போதைய ஆட்சியை அண்மைக் காலத்தில் கவிழ்க்கக்கூடிய ஒரு பொது எதிரணியை உருவாக்கும் தனது முயற்சிகள் வெற்றிபெறும் என தனக்கு நம்பிக்கை இருப்பதாக சரத் பொன்சேகா மேலும் கூறினார்.

# ஆஸி.நோக்கி படையெடுப்பு; சிலாபத்தில் 104 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் கள்ளப்படகு மூலம் அவுஸ்ரேலியா நோக்கிச் செல்ல முயற்சித்த 104 இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் - துடுவாய கடலில் இவர்கள் நேற்று முன்தினம் (16) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மோதர துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கென குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 96 தமிழர்களும், 6 சிங்களவர்களும், இரண்டு முஸ்லிம்களுடம் அடங்குவர். இதில் 13 பெண்கள், 13 சிறுவர்கள் உள்ளடங்குவர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், மட்டக்களப்பு, கொழும்பு, மன்னார், ஜா-எல, நீர்கொழும்பு, வத்தளை மற்றும் கற்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# வெலிக்கடைச் சிறையில் தங்க நகைகள் மாயம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் அனைத்தும் சிறையில் இடம்பெற்ற கலவரத்தின் போது கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் நாயகம் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் பாதுகாப்பு படையினருக்கும் சிறைக்கைதிகளுக்குமிடையில் இடம்பெற்ற கலவரத்தின் போது இரும்புப் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அனைத்து தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் அணிந்திருந்த தங்க நகைகள், அவர்களது சிறைக்காலம் முடியும் வரை சிறைச்சாலை நிர்வாகத்தினால் பொறுப்பேற்கப்பட்டு பாதுகாப்பான இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்படும்.

அவ்வாறு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த நகைகளே தற்போது கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறைச்சாலை பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளைச் சிறைச்சாலைக்குள் தேடும் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றதாகவும் ஆனால் எந்த நகைகளும் அங்கு மீட்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

# வாயுக் கசிவின் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

(கொழும்பு)

வாயுக்கசிவு காரணமாக நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அச்சம் தற்போதைக்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விசவாயுக் கசிவினால் இரண்டு பேர் பலியாகினர். எவ்வாறாயினும் இந்த விசவாயுக் கசிவு எண்ணெய் சுத்திகரிப்பு பணிகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும், இதனால் போதிய அளவு எண்ணெய் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தற்போதைக்கு எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெலிக்கடைக் கைதிகள் விரைவில் மட்டக்களப்புக்கு

## ஆயுள் கைதிகளுக்கு தனிப்பிரிவு

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மரணதண்டனைக் கைதிகளையும், ஆயுள்தண்டனைக் கைதிகளையும் மட்டக்களப்பில் உள்ள தனியான தீவு ஒன்றுக்கு மாற்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு வாவியில் அமைந்துள்ள மாந்தீவுக்கே முதல் கட்டமாக 1000 மரணதண்டனை, ஆயுள்தண்டனைக் கைதிகள் மாற்றப்படவுள்ளனர்.

மாந்தீவில் தொழுநோயாளர்களைப் பராமரிப்பதற்கான மருத்துவமனை ஒன்று உள்ளது. இங்குள்ள பெரும்பகுதி கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

இந்தக் கட்டடங்களை சிறிலங்கா சுகாதார அமைச்சிடம் இருந்து பொறுப்பேற்கவுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, அங்கே மரணதண்டனை, ஆயுள்தண்டனைக் கைதிகளை தங்கவைக்கவுள்ளது.

முன்னதாக, போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபட்ட கைதிகளை கற்பிட்டியில் உள்ள தீவு ஒன்றில் தடுத்து வைக்க திட்டமிடப்பட்ட போதும், போதிய கட்டட வசதிகள் இன்மையால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

இவர்களையும் மாந்தீவில் தடுத்து வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக அங்குள்ள மூன்று விடுதிகள் உடனடியாகப் புனரமைக்கப்படவுள்ளன.

# இலங்கையுடன் நெருக்கமடையும் இந்தியா சீனாவுடனான நட்புக்கு ஆப்பு

## அடியோடு நிராகரிக்கிறார் ஜி.எல். பீரிஸ்




இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே இங்கிருந்து தஞ்சம் கோரிச் செல்வோரை சர்வதேச நாடுகள் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவு மிகுந்த ஆரோக்கியமாகத் தொடர்வதாகவும் இது சீனாவுடனான இலங்கையின் நல்லுறவை எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார். பிரித்தானியா, சுவிட்சர்லாந்து உட்பட பல்வேறு நாடுகள் பெரும் எண்ணிக்கையான இலங்கையர்களை திருப்பியனுப்பியுள்ளன. இலங்கை பாதுகாப்பான நாடு என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாலேயே அந்த நாடுகள் இலங்கையர்களைத் திருப்பியனுப்பி வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய பீரிஸ் தெரிவிக்கையில்:

இலங்கையில் சமாதானத்தையும், நிலைப்புத் தன்மையையும் உறுதிப்படுத்த அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை பல வெளி நாடுகள் வரவேற்று பாராட்டியுள்ளன. இலங்கை பாதுகாப்பான, அமைதி நிலவும் நாடு என்பதையும் அந்நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இதனாலேயே பல நாடுகளிலிருந்து இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு நாடு திருப்பும் நடவடிக்கைகளுக்கு எதிராக சில சக்திகள் அந்நாடுகளில் நீதிமன்றம் சென்றன. எனினும், அதனை ஏற்றுக்கொள்ளாத அந்நாடுகள் இலங்கையானது மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான நாடு. எனவே சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் என அறிவித்தன.

அதேபோல, சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்குச் செல்பவர்களைத் தடுப்பதற்கு அவுஸ்ரேலியாவுடன் இணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம். புகலிடக் கோரிக்கை நடைமுறைகள் நிராகரிக்கப்பட்டவர்களை நாட்டுக்குத் திருப்பியனுப்புமாறு அந்நாட்டுக்கு நாம் கூறியுள்ளோம். இவ்வாறான கடும் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுக்க முடியாது என்பதையும் அவுஸ்ரேலிய அரசுக்கு நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். சட்ட விரோத படகுகளில் செல்பவர்களைத் தடுப்பதற்கும், கடல் மார்க்கமான கடத்தல்களையும் தடுப்பதற்கு இலங்கை கடற்படையினர் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை எமது பிராந்திய நாடுகள் வரவேற்றுள்ளன.

இலங்கை இந்தியாவுடன் கொண்டிருக்கும் உறவு தொடர்பில் லக்ஷ்மன் கிரியல்ல எம். பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர், இலங்கை இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. இந்தியாவுடன் இலங்கைக்குக் காணப்படும் உறவானது, சீனாவுடனான நட்புறவுக்கு எவ்வகையிலும் பாதிப்பினை ஏற்படுத்தாது என்றார். 30 வருடங்களுக்கு அதிகமாகத் தொடர்ந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சமாதானமும், நிலைப்புத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில், இதனை மேலும் பலப்படுத்தும் வகையிலேயே பொருளாதார இராஜதந்திர நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையின் நிதிக்கொள்கைகளை பல்வேறு சர்வதேச நாடுகள் பாராட்டியுள்ளன என்றார்.






நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற "மெகாவாசி" சீட்டிழுப்பின் வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் அதிஷ்டசாலி ஒருவருக்கு மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் மாணிக்க சிங்கி ஆகியோர் வழங்குவதையும் கலந்துகொண்ட விருந்தினர்களையும் காணலாம். (54)

# ஆய்வுகூடப் பணிகள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் ஆய்வுகூடங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக வைத்திய சாலையின் ஆய்வுகூட நடவடிக்கைகள் பாதிக்கப்படும் நிலை தோன்றியிருப்பதாக வைத தியசாலைப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராசா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த ஆய்வுகூடத் தேவைகளுக்கான இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினை வழங்காததனை அடுத்தே இந்த நிலை தோன்றியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலையின் இந்த ஆய்வுகூடங்களுக்குரிய இரசாயனப் பொருட்கள் வெளியே தனியார் நிறுவனங்களிடம் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டு வந்ததாகவும், தற்சமயம் அந்த நிறுவனங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்துக்கும் மேற்பட்ட மில்லியன் ரூபாய்கள் செலுத்தவேண்டியிருப்பதனால் அந்த நிதியினை அரசு தராததினால் செலுத்த முடியவில்லை.

இதனால் அந்த நிறுவனங்கள் மேலும் இரசாயனப் பொருட்களை வைத்தியசாலைக்கு வழங்க மறுத்துள்ளதாகவும், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ் வைத்தியசாலைக்கு விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு, இருதய சிகிச்சைப் பிரிவு என்பனவற்றிற்கு கட்டட வசதிகள் போதாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டதுடன் ஐந்து மாடிகளைக் கொண்ட மருத்துவ விடுதிக் கட்டடத் தொகுதிக்கு மேலும் ஒரு லிப்ட் பொருத்தும் பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்த அவர் தற்சமயம் இயங்கி வரும் ஒரு லிப்ற் நோயாளிகளையும், பார்வையாளர்களையும் ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்சமயம் பூட்டப்பட்டுவரும் லிப்ற்றும் வேலை செய்யுமிடத்து தனித்தனியே நோயாளிகளும் ஏனையவர்களும் மாடிகளுக்கு பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (பா)

## மாணவர்கள் சாதனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று சி.சி.த.க. பாடசாலையில் 2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் த.தர்சிகா 152 புள்ளிகளையும், வி.கார்த்திகன் 156 புள்ளிகளையும், சி.சுஜின் நிலாநிதன் 153 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

இம்மாணவர்களின் சாதனையை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டியுள்ளனர்.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகள் காணப்படுகிறது. (04)

## கேப்பாப்புலவு மக்களுக்கு மண்ணெண்ணெய் அடுப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு மாதிரிக் கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் அடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் பரிபாலன சபையினரால் தலா 1175 ரூபா பெறுமதியில் 178 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் அடுப்பு வழங்கப்பட்டுள் ளது. இவ் அடுப்புகள் கடந்த 2 ஆம் திகதி இம்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்வாதார ரீதியில் கஷ்டப்படும் மக்களுக்கு இந்த அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளமையால் தாம் சமையல் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (04)

## வடிகாலமைப்பு வேலை இடைநிறுத்தம்

(பருத்தித்துறை)

புலோலி, கிராம கோட்டிலிருந்து கடற்கரை வரையான வடிகாலமைப்பு வேலைகள் அண்மையில் பெய்த மழை காரணமாக கடந்த வாரம் முதல் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வடிகாலமைப்புக்கென 2 கோடி 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில் மழையினால் நிறுத்தப்பட்டது.

எனினும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வடிகாலமைப்பு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஒப்பந்தகாரர்களை கேட்டுள்ளார். (109)

## பாடசாலைகளுக்கு மலசலகூடத் தொகுதி

(பருத்தித்துறை)

வடமராட்சியில் மேலும் இரண்டு பாடசாலைகளுக்கு மலசலகூடங்கள் அமைப்பதற்கு இலங்கை செம்பிறைச் சங்கமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் முன்வந்துள்ளது.

இதன்படி தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு 9 இலட்சம் ரூபாவும் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு பாடசாலைகளின் மலசலகூட வேலைகளும் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக வடமராட்சி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தார். (109)

## முல்லைத்தீவில் மரம் நடுகை

(முல்லைத்தீவு)

ஜனாதிபதியின் பதவியேற்பு தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியிலான மரம் நடுகை நிகழ்வு நாடு பூராவும் நடைபெற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மரம் நடுகை நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வித்தியாலய அதிபர் செ.அல்பிறட் மாவட்ட வன அதிகாரி இ.ஜெ.எம். ஜெ.கே.ஏக்கநாயக்க, அரச மரக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் பி.ஜி.சிறில் உள்ளிட்டோர் கலநது கொண்டனர்.

மேலும் பொலிஸ் பொறுப்பதிகாரி மரக்கூட்டுத்தாபனத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு உதவிப் பொது முகாமையாளர் பத்ம ஈஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட செயற்திட்டப் பணிப்பாளர் எம்.ஜி.வில்வராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதில் முல்லைத்தீவு மகா வித்தியாலய வளாகத்தில் 25 பயன்தரு மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (04)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு வித்தியாலய அதிபர் அ.கா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.ஸ்ரீராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் சி.தீபானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

## முரசின் இன்றைய பலன்


(18.11.2012 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 03 ஆம் திகதி. நட்சத்திரம் பூராடம் முற்பகல் 7.56 வரை. திதி பஞ்சமி பிற்பகல் 5.27 வரை. சித்தாமிர்தயோகம்.
இராகுகாலம் 4.39 - 6.09 வரை. சுபநேரம் 9.09 - 10.39 வரை.
எமகண்டம் 12.09 - 1.39 வரை, குளிகன் காலம் 3.09 - 4.39 வரை.
ஸ்கந்த ஷஷ்டி விரத 5 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் முடியும். வெற்றி. வேலைகள் எளிதில் முடியும். மிதமான பணவரவு. நண்பர்கள் மத்தியில் வரவேற்பு. உடல்நலத்தில் கவனம் வேண்டும். குடும்பத்தில் குதூகலம். |
| ரிஷபம் | முன்யோசனை. அனுகூல சூழ்நிலை. அறிமுகம் இல்லாதவரிடம் விலகுங்கள். தேவையான பணவரவு. பயண திட்டத்தில் மாறுதல். குடும்பத்தில் ஆதரவு. உடல்நலம் சீராகும். |
| மிதுனம் | பாராட்டுகள் வரும். திட்டமிட்ட காரியம் நிறைவேறும். தொழிலில் இனிய அனுபவம். சராசரி பணவரவு. சக ஊழியர் புகழ்வர். ஆரோக்கிய பலம். குடும்பத்தில் அன்யோன்யம். |
| கடகம் | நறசெயல்கள் புரிவீர்கள். அனுபவசாலியின் உதவி. தொழிலில் இடர்விலகும். பதவி, அந்தஸ்து உயரும். பணவரவுக்கு ஏற்ப செலவுகள். பாதுகாப்பில் கவனம். விருந்துக்கு அழைப்பு. |
| சிம்மம் | சாதகமான நிகழ்வுகள். நண்பர், உறவினர்களிடம் பரிவு. சுயமுயற்சியால் தொழில் வளர்ச்சி. கூடுதல் உழைப்பு. இலாபவிகிதம் கூடும். புத்திரரால் மகிழ்ச்சி. சான்றோரின் ஆசி. |
| கன்னி | செயல்களில் நேர்த்தி. சமயோசிதம் அனுகூலம். தொழில் சிறந்து இலாபம். நண்பர்க்கு உதவுவீர்கள். பூர்விக சொத்தால் வருமானம். குடும்பத்தில் சுபநிகழ்வு. புத்திரரால் பெருமை. |
| துலாம் | மற்றவர்க்கு நல்வழி காட்டுவீர்கள். சமூகப் பொறுப்புணர்வு. தொழிலில் ஊக்கம். உபரி வருமானம். நன்மை நாடி நன்மை அடைவீர். குடும்பத்தில் மகிழ்ச்சி. ஆரோக்கியம் சீராகும். |
| விருச்சிகம் | நிம்மதி. கருணை உண்டாகும். பிறருக்கு உதவிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சி. கௌரவம். பணவரவு குதூகலம். நண்பர்களுடன் சுற்றுலா. மாணவர் தேர்ச்சி. இனிமை, சுபம். |
| தனுசு | உறவினர், குடும்பத்தினர் பாசம். புதிய பொருள் வரவு. பலநாள் திட்டம் நிறைவேறும். தொழில் மந்த கதி. வரவுக்கு மீறிய செலவு. மருத்துவ சிகிச்சை. வெளியூர் நற்செய்தி. |
| மகரம் | நிதானம் நன்மை தரும். பெருமை சேரும். வேலையில் கூடுதல் ஈடுபாடு. வியாபாரம் சராசரி. பணவரவுக்கு காத்திருப்பு நிலை. வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்பத்தில் அமைதி. |
| கும்பம் | செயல்களில் புதிய அணுகுமுறை. தொழிலில் மகிழத்தக்க சாதனை. செலவுகள் இருக்கும். புதியவர் அறிமுகம். கேட்டது கிடைக்கும் யோகம். உறவுகள் உதவி. பக்தி ஈடுபாடு. |
| மீனம் | கலைரசனை. இயற்கை அழகில் மகிழ்வு. பணியில் நேர்த்தி. பணவரவும், பரிசுகளும். வாகன கவனம். குடும்பத்திற்கு பொருள் வாங்குவீர்கள். நண்பர், உறவினர்களின் வாழ்த்து. |

# 77 ஓட்டங்களால் மே.தீவுகள் வெற்றி



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 77 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி பங்களாதேஷின் டக்காவில் நடைபெற்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 527 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 556 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கியுந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பவள் 110, பிராவோ 76, சுனில் நரைன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொகன் ஹசி ஆறு, சஷிப் அல் ஹசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

243 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணி பெப்ஸின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் மளமளவெனப் பறிகொடுத்தது. இறுதியில் பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று, 77 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் நசீர் உசைன் 21, நயீம் இஸ்லாம் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வெப்ஸ் ஐந்து, ராம்போல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக இரு இனிங்ஸிலும் சதம் அடித்த பவள் தெரிவானார். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## தகுதிச் சுற்றில் ஜப்பான் வெற்றி

(மஸ்கட்)

ஓமன் அணிக்கு எதிரான உலக கோப்பை கால்பந்து தொடரின் தகுதிச்சுற்றில் ஜப்பான் அணி வெற்றி பெற்றது.

உலகக் கோப்பை கால்பந்து தொடர் 2014இல் பிரேஸிலில் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிப்போட்டி பல்வேறு இடங்களில் நடக்கிறது. ஓமனில் உள்ள மஸ்கட்டில் நடந்த போட்டியில் ஜப்பான், ஓமன் அணிகள் மோதின.

இதன் முதல் பாதியின் 20ஆவது நிமிடத்தில் ஜப்பானின் ஹிரோசி முதல் கோல் அடித்தார். இரண்டாம் பாதியில் 77ஆவது நிமிடத்தில் ஓமனின் முபாரக் ஒரு கோல் அடித்தார். 88ஆவது நிமிடத்தில் ஷின்ஜி ஒரு கோல் அடிக்க, ஜப்பான் அணி 2-1 என வெற்றி பெற்றது. இந்த வெற்றி உற்சாகமளிப்பதாக ஜப்பான் அணித் தலைவர் தெரிவித்தார்.

## இந்தியா வருகிறது ஆஸி.

(அகமதாபாத்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு (2013) பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட இருப்பதாக இந்திய கிரிக்கெட் சபை அதிகாரி ரத்னாகர் ஷெட்டி தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின் போது அவுஸ்ரேலியா 4 டெஸ்டில் மட்டும் பங்கேற்கும், ஒரு நாள் போட்டி மற்றும் ருவென்ரி-20 போட்டிகள் கிடையாது என்றும், டெஸ்ட் போட்டிகள் கான்பூர், சென்னை, டில்லி, மொகாலி ஆகிய இடங்களில் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்திய அணி கடந்த ஆண்டு இறுதியில் அவுஸ்ரேலியா சென்று விளையாடிய போது டெஸ்ட் தொடரை 0-4 என்ற கணக்கில் இழந்தது குறிப்பிடத்தக்கது.

## எனது ஆட்டத்தை ராவிட் பாராட்டினார்

(அகமதாபாத்)

எனது ஆட்டத்தைப் பாராட்டி ராவிட் எனக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார். இது மகிழ்ச்சியான தருணமாகக் கருதுகின்றேன் என இந்திய அணியின் புஜாரா தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் மும்பை பி.ஏ.பீ. அணிக்காக ஆடிய போது, அந்த ஆட்டத்தில் 87 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தேன். அது தான் இங்கிலாந்துக்கு எதிராக சதம், அதன் பின்னர் இரட்டை சதம் என்று பெரிய ஓட்டங்களைக் குவிக்க உந்துசக்தியாக இருந்தது. பயிற்சி ஆட்டத்தில் ஸ்வான் தவிர மற்ற அனைத்து பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சையும் சந்தித்திருந்தேன். இதனால் இந்தப் போட்டியில் ஸ்வானின் சில ஓவர்களை மிகவும் கவனமுடன் எதிர்கொண்டேன். பிறகு எல்லாப் பந்து வீச்சையும் சிரமமின்றி எதிர்கொண்டு ஓட்டங்களைச் சேர்த்தேன்.

கிரிக்கெட்டில் முன்வரிசையில் விளையாடுவது எப்போதும் முக்கியமானது. அதிலும் 3ஆவது வரிசையில் இறங்கும் போது மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. சில சமயம் தொடக்கத்திலேயே புதிய பந்தைச் சந்திக்க வேண்டி வரும். அதனை உணர்ந்து ஆடுகிறேன். இந்திய அணிக்காக தொடர்ந்து ஆடவேண்டும் என்பதே எனது இலக்கு. அந்த ஆசை நிறைவேறும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீண்டும் துடுப்பெடுத்தாடுகிறது இங்கிலாந்து



(அகமதாபாத்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி மீண்டும் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் அகமதாபாத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி, ஓஜா, அஸ்வின் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிக்கொடுத்தது. இறுதியில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் குக் 41, மட் ப்ரியர் 48, ஸ்ரூவட் புரொட் 25 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஓஜா ஐந்து, அஸ்வின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இங்கிலாந்து அணி 330 ஓட்டங்கள் பின் னிலையில் இருந்தாமையால் இந்திய அணியால் மீண்டும் துடுப்பாட அழைக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் குக் 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இங்கிலாந்து அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 10 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 219 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## ஹேரத் சிறப்புப் பந்து வீச்சு; சுருண்டது நியூசிலாந்து



(காலி)

ஹேரத்தின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, ஹேரத்தின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிக்கொடுத்தது. இருப்பினும் மக்கலம், பிளைஸ் ஆகியோர் ஓரளவேனும் தாக்குபிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மக்கலம் 68, பிளைஸ் 53 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் மிகவும் சிறப்பான முறையில் பந்துவீசிய ரங்கண ஹேரத், 30 ஓவர்கள் பந்து வீசி 65 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் எரங்க மூன்று, குலசேகரஇரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடும் இலங்கை அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஒரு விக்கெட்டை இழந்து ஒன்பது ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## ராவிட்டுடன் ஒப்பிடவேண்டாம்

(அகமதாபாத்)

ராவிட்டுடன் தற்போது புஜாராவை ஒப்பிடவேண்டாம். முதலில் புஜாரா அணியில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துக் கொள்ளட்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்தார்.

புஜாரா, இப்போது தான் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கி உள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்டில் அவர் தனது சிறந்த இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதற்காக இப்போதே அவரை ராவிட்டுடன் ஒப்பிட முடியாது.

முதலில் அவர் அணியில் ஒரு நிரந்தர இடத்தை பிடிக்கட்டும். தனக்கு என்று ஒரு பெயரை ஏற்படுத்தட்டும். எனவே ராவிட்டுக்குப் பதிலாக சரியான வீரர் இவர் தான் என்று கூறி அவரை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டாம். ராவிட் 15 ஆண்டுக்ள் கிரிக்கெட் விளையாடித் தான், இந்த நிலைமைக்கு உயர்ந்தார். அதேபோன்று புஜாராவும் முதலில் இந்திய அணியில் நிரந்தர இடத்தைப் பிடிக்கப்பட்டும். அதன் பின்னர் பார்ப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வயூரன் ஹட்ரிக் கோல் மானிப்பாய் இந்து சம்பியன்



(மானிப்பாய்)

வயூரனின் சிறப்பான ஹட்ரிக் கோல் மூலம் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கால்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் கடந்த 14ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இவ்இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணியும் மோதின.

இதில் ஆரம்பம் முதலே மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் தொடங்கி 3ஆவது நிமிடத்தில் வயூரன் அதிரடியான முறையில் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து கோல் போடும் சந்தர்ப்பங்கள் பல கிடைத்தும், அந்த வாய்ப்பை மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள் தவறவிட்டனர். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆட்ட வேகத்திற்கு முன்னால், மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணி ஒன்றுமே செய்யமுடியவில்லை. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் மேலும் உற்சாகமடைந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதில் சிறப்பானஆட்டத்தைவெளிப்படுத்திய வயூரன் தொடர்ந்து இரண்டு கோல்களை அடுத்தடுத்து அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியனாகியது. ஹட்ரிக் கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர் வயூரன் அனைவராலும் பாராட்டப்பட்டார். இதேவேளை, இப்பிரிவின் மூன்றாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## இளைஞர் சேவை மன்ற விளையாட்டு விழா

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கை இளைஞர் சேவைகள் சம்மேளனம், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு என்பன இணைந்து நடாத்தும் 24ஆவது இளைஞர் விளையாட்டு விழா எதிர்வரும் 22, 23, 24 மற்றும் 25ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் 4 நாட்கள் இடம்பெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பெரேரா தெரிவித்தார்.

இவ்விளையாட்டு விழாவின் ஆரம்ப விழா எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 3 மணிக்கு இடம்பெறும். இதே வேளை இறுதி நாள் விழா 25ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தலை வர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் 23ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டி கடந்த முறை ஹோமாகம தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மரதன், சைக்கிளோட்டப் போட்டி மாத்தறையில் இடம்பெற்றது. (93)

## ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீபழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலய ஆதரவுடன் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த 10,11ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்பட்ட இச்சதுரங்கப் போட்டி 15, 19 வயதிற்குட்பட்டவர்களுக்கிடையில் நடத்தப்பட்டது.

இதில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு ஆண்கள்: முதலாமிடம் தர்மலிங்கம் பாசுபதன் (யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரண்டாமிடம் சிறிதரன் பிருந்தயன் (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்), மூன்றாமிடம் சிறிராஜசிங்கம் பிரதீப் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

15 வயதுப்பிரிவு பெண்கள்: முதலாமிடம் கோபிகா கந்தவனம் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் பிரதீபா புனிதராசா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), மூன்றாமிடம் ஜெயதாரணி ஜெயகணேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பிரியங்கா குமாரசிங்கம் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

19 வயதுப் பிரிவு ஆண்கள்: முதலாமிடம் சிவப்பிரகாசம் வினுஷன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரண்டாமிடம் மகேஸ்வரன் சர்வேசன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), மூன்றாமிடம் பாலச்சந்திரன் தினுஷன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

19 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் சயந்தி சர்வானந்தன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரண்டாமிடம் மிதுனா அருந்தவராசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் திலக்சி விநாயகம்பிள்ளை (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்). (118)

## ஆசிய இளைஞர் போட்டி 2017 இலங்கையில்

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள மூன்றாவது ஆசிய இளைஞர் போட்டிகளை நடத்த இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆசிய ஒலிம்பிக் செயற்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதோடு, அம்பாந்தோட்டை மாவட்டம் இதற்காகத் தெரிவும் செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் மக்காவு நகரில் இடம் பெற்ற செயற்குழுவின் அமர்வின் போதே இது தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான ஆவணங்களிலும் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளனர்.


இந்த அமர்வில் இலங்கை சார்பில் ஒலிம்பிக் செயற்குழுவின் நிர்வாக இயக்குனர் ஹேமசிறி பெர்னாண்டோ கலந்து கொண்டதுடன், தவிர்க்க முடியாத சில காரணங்களால் இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சராலும், ஜனாதிபதியின் செயலாளராலும் இவ்வமர்வில் கலந்து கொள்ள முடியவில்லை.

இலங்கைக்கு கிடைத்த பெரிய மரியாதையாக இவ்வாய்ப்பு அமையும் என ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.


இப்போட்டிகள் நடைபெறும் தினங்களை இலங்கையின் தேசிய ஒலிம்பிக் செயற்குழு தீர்மானிக்கவுள்ளதுடன், போட்டிக் கிராமத்தை உருவாக்கும் வேலைகள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஆசிய இளைஞர் போட்டிகளின் முதலாவது தொடர் கடந்த 2009 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இடம்பெற்றது.

இரண்டாவது தொடர் 2013 ஆம் ஆண்டு சீனாவின் நான்ஜிங்கில் இடம் பெறவிருப்பதுடன், மூன்றாவது தொடர் 2017 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நான்காவது தொடரை நடத்த இந்தோனேஷியா தெரிவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்



மாகாண மட்ட காரத்தே போட்டியில், 13 வயதிற்குட்பட்டோர் பிரிவில் பதக்கம் வென்ற சென் ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள், கராத்தே ஆசிரியர் சென்சே வியராஜ் மற்றும் பொறுப்பாசிரியர் நிசாந்துடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி.)



# நோபல் 2012

— இம்மானுவேல் பிரபு -

2012ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகளிலும் வழக்கம் போல அமெரிக்கர்களே அதிகப் பரிசு களைப் பெற்றுள்ளனர். அறிவியல் துறைகளைப் பொறுத்தவரையில் மருத்துவம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்றிலும் மிகவும் புரட்சிகரமான ஆராய்ச்சிகளுக்காக நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### மருத்துவம்

மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு ஜப்பானைச் சேர்ந்த ஷின்யா யமனாகா (Shinya Yamanaka), இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் கேர்டன் ஆகிய இருவருக்கும் கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாதாரண முதிர்ந்த உடல்செல்களில் இருந்து பல்திறன் கொண்ட ஸ்டெம்செல்களை உருவாக்கும் முறையை இவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

அனைத்து செல்களுக்கும் மூலம் ஸ்டெம் செல்கள் தாம். ஸ்டெம் செல்லில் இருந்துதான் உடலின் வேறுபட்ட பணிகளைச் செய்யும் பல்வேறு வகையான செல்கள் உருவாகின்றன. பாதிக்கப்பட்ட திசுக்களை பதிலீடு செய்வதும் குறிப்பிட்ட சில உடல் பாகங்களை பதிலீடு செய்வதும் ஸ்டெம் செல் ஆய்வினால் விரைவில் சாத்தியப்படலாம். அதற்கு உடலுறுப்பைப் பெறுபவரின் டி.என்.ஏ. உடன் பொருந்தக்கூடிய ஸ்டெம் செல்கள் பெருமளவு தேவைப்படும். இந்தத் தேவையைச் சாத்தியமாக்குவதற்கான வழிமுறை களை மேற்படி இருவரும் கண்டறிந்திருக்கிறார்கள்.

### பௌதிகவியல்

பௌதிகவியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் டேவிட் வின்லேண்ட், பிரான்ஸின் சேர்ஜ் ஹாரோச் ஆகிய இருவருக்கும் கூட்டாக வழங்கப்படுகிறது. ஒரு அணு அல்லது தனி துகளைச் சிதைக்காமல், அவற்றின் குவாண்டம்-இயங்கியல் இயல்பை மாற்றாமல் அல்லது பாதிக்காமல், அவற்றை தனித்தனியாக அளக்கவும் கையாளவும் உதவும் முறைகளை இவர்கள் கண்டறிந்திருக் கிறார்கள்.

ஒரு துகளை அதன் சூழலில் இருந்து தனியாக பிரித்தெடுப்பது என்பதே மிகவும் கடினமான விஷயமாகும் அப்படிப் பிரித்தெடுக்கும்போதே, புறச்சூழலுடன் நிகழும் வினை காரண-மாக அந்தத் துகள் தன் குவாண்டம் இயல்புகளை இழந்துவிடும். மேற்படி பௌதிகவியலாளர்கள் கண்டுபிடிப்பின்படி, புறச்சூழல்களின் தாக்கம் ஏதுமின்றி ஒரு தனி துகளை நாம் ஆராய முடியும். ஒளி அல்லது ஃபோட்டான்களைப் பயன்படுத்தி மின்னூட்டப்பட்ட அணுக்கள் அல்லது அயனிகளை அளந்து, கட்டுப்படுத்தும் முறையை டேவிட் வின்லேண்ட் கண்டறிந்தார். அதேவேளையில், சேர்ஜ் ஹாரோச், அணுக்களைப் பயன்படுத்தி போட்டான்கள் அல்லது ஒளித் துகளை அளவிட்டு, கட்டுப்படுத்தும் முறை களைக் கண்டறிந்தார்.

இந்தக் கண்டுபிடிப்புகளின் பயனாக அதிவேக குவாண்டம் கணனிகளை உருவாக்க முடியும் என்கிறார்கள். சென்ற நூற்றாண்டின் மனித வாழ்க்கையில் கணனிகள் ஏற்படுத்திய மாற்றத்துக்கு ஈடான மாற்றத்தை குவாண்டம் கணனிகள் இந்நூற்றாண்டில் ஏற்படுத்தும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

### இரசாயனவியல்



 

இரசாயனவியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவில் உள்ள டியூக் பல்கலைக் கழகத்தின் ஹோவர்ட் ஹியூஸ் மெடிகல் இன்ஸ்டிட்யூட்டில் பணியாற்றும் றொபேர்ட் லெ.ஃப் கோவிஸ், மற்றும் ஸ்டான்.ஃபோர்ட் மருத்துவ பல்கலைக்கழகத்தில் ஆய்வுகள் மேற்கொண்டு வரும் பிரையன் கே கோபில்கா ஆகிய இரண்டு அமெரிக்கர் களுக்கும் கூட்டாக வழங்கப்படுகிறது. ஏற்பிகளுடன் இணைந்த ஏ-புரோட்டின் பற்றிய ஆய்வுகளுக்காக அவர்கள் நோபல் வெல்கிறார்கள்.

### பொருளாதாரம்

பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அல்வின் ஈ ரோத் மற்றும் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் லொயிட் எஸ் ஷாப்லி ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்படு கிறது.


மருத்துவம், கல்வித் துறைகளில் சந்தை நிலவரங்கள் எவ்வாறு உள்ளன, வேறுபட்ட சந்தை நிலவரங்களை எவ்வாறு ஒப்பீடு செய்வது போன்றவற்றை சிறப்பாக

விளக்கும் கோட்பாட்டுக்காக இவர்கள் நோபல் பரிசு பெறுகிறார்கள்.

பொதுவாக சந்தை நிலவரங்களை அளிப்பு-தேவை என்ற அடிப்படையில் தான் பொருளியல் ஆராய்கிறது. இவைபோக வேறு சில அகக்காரணி களும் சந்தை நிலவரத்தை நிர்ணயிக் கின்றன என்பது இவர்களுடைய கோட்பாடு.

### இலக்கியம்



சீன எழுத் தாளரான 57 வயது மோ யான் இலக்கியத்துக்கான நோபல் பெறுகிறார். மாய யதார்த்தவாத உத்தியில் சமகாலம், வரலாறு, கிராமிய நாட்டுப்புறக் கதை கள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் விதமாக அவரது படைப்புகள் இருப்பதாக நோபல் கமிட்டி பாராட்டியுள்ளது.

அவர் சீன மொழியில் எழுதிய பல புதினங்கள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. Life and Death Are Wearing Me Out (2008), Red Sorghum (1987) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பொதுவாக சீன அரசை விமர்சிக்கும் எழுத்தாளர்களுக்கே நோபல் அளிக்கப்படுவதாக அந்நாடு குற்றம்சாட்டுவது வழக்கம். இந்த முறை சீனா வாய் திறக்கவில்லை.

### அமைதி

அமைதிக்கான நோபல் பரிசு ஐரோப்பிய யூனியனுக்கு வழங்கப்படுகிறது. கடந்த 60 ஆண்டுகளாக ஐரோப்பாவில் அமைதி, நல்லிணக்கம், ஜனநாயகம்



மற்றும் மனித உரிமைகள் மேம்பாட்டுக்காக தொடர்ந்து பாடுபட்டு வருவதற்காக ஐரோப்பிய யூனியன் இந்தப் பரிசைப் பெறுகிறது. போரில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகளை அமைதி தேசங்களாக மாற்றிய பெருமை ஐரோப்பிய ஒன்றியத்தையே சேரும் என்று நோபல் கமிட்டி பாராட்டியுள்ளது. ஐரோப்பிய யூனியன் தற்போது கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தாலும், ஐரோப்பிய நாடுகளில் மனித உரிமைகள், ஜனநா யகம், அமைதி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்காக ஐரோப்பிய யூனியன் பாடுபட்டு வருவதாக கமிட்டி குறிப்பிடுகிறது.

### நோபல் கதை

அறிவியல், பொருளாதாரம், உலக அமைதி ஆகிய துறைகளில் உலகில் வழங்கப்படும் மிகப்பெரிய அங்கீகாரம் நோபல் பரிசுதான். இந்தப் பரிசை நிறுவியவர் டைனமைட் வெடிமருந்தைக் கண்டுபிடித்த சுவீடன் விஞ்ஞானியான அல்.ஃப்ரட் நோபல்.



டைனமைட் உட்பட ஏறத்தாழ 355 கண்டுபிடிப்புகள் மூலம், தான் சேர்த்த செல்வத்தை அறிவியல், இலக்கியம், உலக அமைதி ஆகிய துறைகளில் மனிதகுல மேம்பாட்டுக்காக அளப்பரிய சாதனைகள் புரிந்தவர்களுக்கு பரிசுகள் வழங்க, தான் இறப்பதற்கு முன் உயில் எழுதிவைத்துச் சென்றார். அதன்படி 1895இல் நோபல் பரிசுகள் நிறுவப்பட்டன.

1901 ஆம் ஆண்டு முதல் இயற்பியல், இரசாயனவியல், மருத்துவம் அல்லது உடல்செயலியல், இலக்கியம் மற்றும் உலக அமைதி ஆகிய துறைகளுக்கு நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு 1968இல் நிறுவப்பட்டு 1969ஆம் ஆண்டு முதல்தான் அளிக்கப்பட்டு வருகிறது. நோபல் பரிசுகள் அனைத்தும் அல்.ஃப்ரட் நோபலின் நினைவு தினமான டிசம்பர் 10 அன்று வழங்கப்படும்.

---

## "ஓப்பனர்கள்"

1813ஆம் ஆண்டில் உணவுப் பண்டங்கள் அடைக்கப்பட்ட டின்கள் அறிமுகமானபோது அடைக்கப்படும் உணவு எடையைவிட டின் எடை அதிகமாக இருந்தது. இரும்பால் செய்யப் பட்டிருந்ததால் டின்னை திறப்பதும் கடினமாக இருந்தது.

1858ஆம் ஆண்டில் தான் முதன்முறையாக Can Opener உருவாக்கப்பட்டது.




ஆனால் இந்த ஓப்பனர்கள் கடை பணியாளர்களிடமே இருக்கும். வாங்கும் பொருள்களை திறந்து கொடுத்துவிட்டு தங்களிடமே வைத்துக் கொள்வார்கள்.



1870 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் லீமேன், டின் விளிம்பில் வைத்து சாவி போல் சுழற்றினால் திறந்து கொள்ளும் நவீன கேன் ஓப்பனரைக் கண்டுபிடித்தார்.

---

## வெள்ளித்தேன் கிண்ணம்!



ஏ.ஆர்.ரஹ்மான் முதன்முதலில் திரைப்பட இசையமைப்பாளராக அறி முகம் ஆன ஆண்டு 1992. ஆனால் அவரது முதல் படத்தில் பாடகர் பி.ஜெயச்சந்திரன் பாடவில்லை. ஆனால் ரஹ்மானின் முதல் பாடலைப் பாடிய பெருமை பி.ஜெயச்சந்திரனுக்கு உண்டு.

ரஹ்மானின் தந்தை ஆர்.கே.சேகர் 1975ஆம் ஆண்டு இசையமைத்த மலை யாளப் படம் "பெண்படா". அதில் மொத்தம் 4 பாடல்கள். மூன்று பாடல்கள் முடிந்த நிலையில், சிறுவனாக இருந்த ரஹ்மான் தற்செயலாக அமைத்த மெட்டொன்று சிறப்பாக இருந்ததால் அதையே அந்தப் பாடலுக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

"வெள்ளித்தேன் கிண்ணம் போல" எனத் தொடங்கும் அப்பாடல்தான் அந்த ஆண்டின் சூப்பர் ஹிட் பாடல்!

# வெற்றியின் இரகசியம் 08

- சி. அருண்பரத் -


தங்கள் பிள்ளை சரியாகப் படிக்கவில்லையே என்று புலம்பும் பெற்றோருக்கு, விஞ்ஞானி எடிசனின் நிஜ வாழ்க்கைக் கதை தைரிய மூட்டும். மின்சார விளக்கு உட்பட, ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரரான விஞ்ஞானி, தோமஸ் அல்வா எடிசனுக்கு, காது சரிவரக் கேட்காது. மூன்று மாதமே பள்ளியில் படித்தவர். "அடிமக்கு" என்று, ஆசிரியர்களால் முத்திரை குத்தப்பட்டு, பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டார்.

ஆயிரம் முறை புதுப்புது வழிகளில் முயற்சி செய்தும், மின்சார விளக்கைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதைப் பார்த்து, மற்றவர்கள் கிண்டல் செய்த போது, "நான் ஆயிரம் வழிகளில் மின்சார விளக்கு எரியாது என்ற உண்மையைக் கண்டுபிடித்தேன் அல்லவா?" என்று நகைச்சுவையாகப் பதிலளித்தார். தன், 67 வயதில், இவரது ஆராய்ச்சி மையம், தீ விபத்தில் தரைமட்டமாகியது. அப்போது, அவர், "பரவாயில்லை, கடவுள் புதிய கண்டுபிடிப்புக்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளார்..." என்று கூறினார். விடா முயற்சிக்கும், மனவலிமைக்கும் எடிசனைத் தவிர, வேறு யாரை உதாரணமாகச் சொல்லுவது?

பீதோவன் காது கேளாதவர். இளம் வயதில், இசை ஞானம் இல்லாதவர் என்று ஒதுக்கப்பட்டவர். ஆனால், பிற்காலத்தில் உலகிலேயே உன்னதமான இசையை உருவாக்கியவர் என்று புகழப் பட்டார்.

மிகச் சிறந்த அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவராகக் கருதப்பட்ட ப்ராங்ளின் ரூஸ்வெல்ட், சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி, இரண்டாம் உலகப் போரின் போது, அமெரிக்காவை வழி நடத்தி வெற்றி கண்டார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், அதிகாலையில் வீடு வீடாகச் சென்று பேப்பர் போட்டு, பள்ளிக்குச் சென்றிருக்கிறார். இப்படிச் சொல்ல ஆரம்பித்தால், அடி மட்டத்திலிருந்து புகழின் உச்சத்தை அடைந்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.



மிகச் சிறந்த சாதனையாளர்கள் கூட, ஆரம்ப காலத்தில் தடுக்கி விழுந்திருக்கின்றனர். "ஃபோர்ட்" என்ற கார் கம்பெனியை நிறுவி, புதிய கார்களை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய கோடீஸ்வரரான ஹென்றி ஃபோர்ட், முதல் காரை உருவாக்கும் போது, ரிவர்ஸ் கியரைப் பொருத்த மறந்து விட்டார்.

தோல்வியடைந்து விடுவோமோ, அவமானப்பட்டு விடுவோமோ என்று பயந்தே, பலர் முயற்சி செய்வதேயில்லை.

இன்று, உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் பில் கேட்சும், அப்பிள் நிறுவனத்தின் மூலம், கம்ப்யூட்டர் மற்றும் செல்போன் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய, ஸ்டீவ் ஜொப்ஸ் ஆகிய இருவரும், கல்லூரிப் படிப்பைப் பாதியிலேயே விட்டவர்கள். பில்கேட்ஸ் தன் நண்பரோடு, வீட்டில் கார் நிறுத்துமிடத்தில் ஆரம்பித்த நிறுவனம் தான், உலகப் புகழ்பெற்ற மைக்ரோசொப்ட்.

தனக்கு நிறைய திறமையிருந்தும், அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள், ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புகழின் உச்சிக்குச் சென்ற பலர், ஆரம்ப காலத்தில் அங்கீகாரம் கிடைக்காமல், போராட நேர்ந்திருக்கிறது.

ஒரு துறையில் சாதனை படைக்க, இளம் மேதையாக இருந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆர்வமும், ஈடுபாடும், திறமையும், உழைப்பும் இருந்தால், எந்த வயதிலும் சாதனை படைக்கலாம்.

மிகச்சிறந்த சாதனையாளர்கள் துரதிர்ஷ்டவசமாக சறுக்கி விழ நேர்ந்தாலும், அவர்களுடைய தன்னம்பிக்கையும், கம்பீரமும் சற்றும் குறைவதில்லை.

எல்லாத் தோல்விகளும், அனைவரையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. உதாரணமாக, பரீட்சை, போட்டி, வியாபாரம் மற்றும் காதலில் தோல்வியடைந்தவர்களில், தற்கொலை செய்து கொள்பவர்கள் ஒரு ரகம். ஆனால், அவர்களை விட மோசமான தோல்வியடைந்தவர்கள், "பரவாயில்லை, எனக்கு இது ஒரு நல்ல பாடம்..." என்று ஆக்கபூர்வமாக எடுத்துக் கொள்பவர்கள் மறு ரகம். நாம் இந்த இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்! எப்போதெல்லாம் பிரச்சினை மற்றும் தோல்வியைச் சந்திக்க நேர்கிறதோ, அப்போது இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம். "அதனால் என்ன? அடுத்து என்ன?"

நல்ல வழி தானாகவே பிறக்கும்.

தொடரும்...

---




டார்ஜிலிங்கில் வசிக்கும் ஏழை மாற்றுத்திறனாளி பர்ஃபி. வாய் பேச, காது கேட்க இயலாதவர். அந்த ஊருக்குக் குடி பெயரும் வசதி படைத்த குடும்பத்தைச் சார்ந்த பெண்ணான ஸ்ருதிக்கும் பர்ஃபிக்கும் காதல் மலர்கிறது. ஸ்ருதி ஏற்கெனவே திருமணம் நிச்சயமானவர் எனினும் பர்ஃபியின் குணாதிசயங்களைக் கண்டு தன் மனதை அவரிடம் பறிகொடுக்கிறார். வழக்கம் போல அந்தஸ்து தடையாக


பிரியங்கா சோப்ரா

வந்து நிற்கிறது. வேறு வழியின்றி ஸ்ருதி தனக்கு நிச்சயிக்கப்பட்டவரையே திருமணம் செய்துகொண்டு கொல்கத்தா சென்று விடுகிறார்.

ஐந்தரை வருடங்கள் உருண்டோடுகின்றன. தன் தந்தையின் சிகிச்சைக்காக பர்ஃபிக்கு அவசரமாக பணம் தேவைப்பட, ஊரின் பெரும் பணக்காரரரின் பேத்தியான ஜில்மில்லைக் கடத்தி பணம் பறிக்க முடிவுசெய்கிறார். மனநலம் குன்றிய ஜில்மில்லை முயன்று கடத்தி பணம் பறித்தும் விடுகிறார் பர்ஃபி. சிறு வயதிலிருந்து ஆசிரமத்தில் வளர்ந்த ஜில்மில்லுக்கு பர்ஃபியை பிடித்துவிட, மீண்டும் வீட்டுக்குச் செல்ல மறுக்கிறார். இதற்கிடையில் வங்கி ஒன்றை கொள்ளை அடிக்க முயன்ற வழக்கிலும், ஜில்மில்லைக் கடத்திய வழக்கிலும் பர்ஃபியை பொலிஸ் துரத்துகிறது. பொலிஸிடம் இருந்து தப்பி ஜில்மில்லையும் அழைத்துக்கொண்டு பல இடங்களுக்குப் பயணிக்கிறார் பர்ஃபி.

எல்லாருடைய மனத்தையும் கொள்ளைகொள்ளும் தூய்மையான உள்ளம் கொண்ட பர்ஃபி, ஜில்மில்லின் உள்ளத்தையும் கொள்ளைகொள்வதில் ஆச்சரியமில்லை. இறுதியில் கொல்கத்தாவில் குடியேறும் பர்ஃபி தன் முன்னாள் காதலி ஸ்ருதியைச் சந்திக்கிறார். பர்ஃபியிடம் கொண்ட ஊடலின் காரணமாக ஜில்மில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கொல்கத்தாவை விட்டு வெளியேறுகிறார். பின் பர்ஃபியும் ஸ்ருதியும் ஜில்மில்லைத் தேடுகிறார்கள். தேடல் பயணத்தின்போது, தான் இன்னும் பர்ஃபியை காதலித்துக் கொண்டிருப்பதை உணர்கிறார் ஸ்ருதி. இறுதியில் யார் யாரோடு இணைகிறார்கள் என்பதோடு முடிகிறது கதை.

சிம்பிளான கதை. குறைவான வசனங்கள், நிறைவான காட்சிகள் என்ற அடிப்படை திரைக்கதை விதியைப் பின்பற்றி எழுதப்பெற்ற திரைக்கதை. படத்தில் வசனங்கள் மிகக் குறைவு. காட்சிகளாலே படத்தை நகர்த்தி தான் ஒரு தேர்ந்த கதை சொல்லி என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார் அனுராக் பாசு.

படத்தின் இன்னொரு கதைசொல்லி இசையமைப்பாளர். தன் இசையின் மூலம் புதியதொரு [illegible] சொல்கிறார் அவர். பல இடங்களில் காட்சிகளை அடுத்த தளத்துக்கு எடுத்து செல்கிறது இசை.

பர்ஃபியாக ரன்பீர் கபூர் எந்த ஒரு பெரிய நடிகரின் பாணியையும் பின்பற்றாமல் அசலான நடிப்பால் முத்திரை பதிக்கிறார் இவர். படம் முழுக்க அவர் வெளிப்படுத்தியிருக்கும் நகைச்சுவை உடல்மொழி, படம் முடிந்தபின்னும் நினைவிலிருந்து நீங்க மறுக்கிறது. ஜில்மிலாக பிரியங்கா சோப்ரா, ஸ்ருதியாக இலியானா. பிரியங்கா அதிகம் மெனக்கெட்டிருக்கிறார். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார். முன்னாள் உலக அழகியை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் துளிக்கூட எழாத அளவுக்கு பிரியங்காவின் நடிப்பு ஒரு மனவளர்ச்சி குன்றிய பெண்ணை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. அதற்கு அவரின் உடையமைப்பும் பெரிதும் உதவியுள்ளது.


பர்ஃபி படத்துக்கு தன் ஒளிப்பதிவின் மூலம் உயிரூட்டியிருக்கும் ஒளிப்பதிவாளர் ரவிவர்மன் ஒரு தமிழர். கறுப்பு வெள்ளையில் கண்ட சார்ளி சாப்ளின் படங்களை கலரில் காண்கிறோமா என்று எண்ணும் அளவுக்கு பல சாப்ளின் காட்சிகள் தென்படுகின்றன. மேலும், நோட் புக், கிக்குஜிரோ, சிங்கிங் இன் தி ரெயின் போன்ற பல உலகப் படங்களில் இருந்து காட்சிகள் தழுவப்பட்டிருக்கின்றன.

ஆனால், அனைத்தையும் மீறி பர்ஃபி தனித்து நிற்கிறான். காரணம், மாற்றுத் திறனாளிகளைப் பற்றி எடுக்கப்பட்ட அனைத்துப் படங்களும் அவர்கள்மீது பரிதாபம் விளைவிப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கும். ஆனால் பர்ஃபி பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக, பிரமிப்பை உருவாக்குகிறான். சுவையான, சுகமான பர்ஃபி.



- அரவிந்த் சச்சிதானந்தம் -

---



## தர்மம்

அறிவு, செல்வம், கண்ணியம் மூன்றும் நண்பர்கள். மூவரும் பிரியும் நேரம் வந்தது. அப்போது அறிவு சொன்னது:

"என்னைக் கல்விக் கூடங்களில் தேடிக் கொள்ளலாம்"

செல்வம் சொன்னது: "என்னைச் செல்வந்தர்களின் இல்லங்களில் தேடிக் கொள்ளலாம்"

கண்ணியம் மட்டும் அமைதியாக இருந்தது. மற்ற இரண்டும் கண்ணியத்தின் அமைதிக்கான காரணத்தைக் கேட்டன.

"சொல் நண்பா... ஏன் அமைதியாக இருக்கிறாய்?...."

கண்ணியம் சொன்னது:

"நான் ஒருவரை விட்டுப் பிரிந்துவிட்டால் மீண்டும் கிடைக்கமாட்டேன்"!




A.J.Nimalrajan

## கூகுள் தேடலில் பார்த்த பக்கங்கள் மீண்டும் வருவதைத் தவிர்க்க

இணையத்தில்கூகுளின் சேவை சிறப்பானதே. கூகுளில் ஏதேனும் தீவிரமாக தேடி கொண்டிருக்கும் பொழுது நாம் ஏற்கனவே பார்த்த பக்கங்களும் சேர்ந்தே வரும். இதனால் ஒரே பக்கத்தை திரும்பத் திரும்ப பார்க்க வேண்டிய சூழல் உண்டாவதுடன் நமக்கு தேவையான தீர்வை கண்டறிய அதிக நேரம் செலவழிக்க வேண்டியாகி உள்ளது. இந்தப் பிரச்சினைகளை தவிர்க்க ஏற்கனவே பார்த்த பக்கங்களை மறுபடியும் கூகுள் தேடலில் காட்டாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று கீழே பார்ப்போம்.

இதற்கு கூகுளில் ஒரு வசதி உள்ளது. கூகுள் தேடியந்திரத்தில் தேடிகொண்டிருக்கும் பொழுது அதே பக்கங்களை மறுபடியும் வருவதை தவிர்க்க கூகுள் பக்கத்தில் Show Search Tools என்பதை கிளிக் செய்யுங்கள்.

அதை கிளிக் செய்த உடன் சில தேடல் வசதிகள் வரும். அதில் Not Yet Visited என்பதை கிளிக் செய்தால் போதும் ஏற்கனவே பார்த்த பக்கங்களை நீக்கி புதிய தேடல் முடிவுகளை கூகுளில் காணலாம்.

## உங்கள் பழைய கணினியின் அனைத்து தகவல்களும் புதிய கணினிக்கு



நம்முடைய பழைய கணினி பழுதாகினாலோ அல்லது வேறு காரணத்திற்காக புதிய கணினியை வாங்குகிறோம். அப்படி வாங்கும் போது நம்முடைய பழைய கணினியில் உள்ள தகவல்கள் மென் பொருட்கள் அனைத்தையும் அப்படியே நம்முடைய புதிய கணினிக்கு மாற்ற மிகுந்த சிரமப்படுவோம். கால நேரமும் அதிகமாகும். இந்தப் பிரச்சினையை தீர்த்து பழைய கணினியில் உள்ள அனைத்து தகவல்களையும் சுலபமாக புதிய கணினிக்கு மாற்ற இரு இலவச மென்பொருள் உள்ளது.

□ PickMeApp இது முற்றிலும் ஒரு இலவச மென்பொருள்.இருந்தாலும் தாங்கள் இந்தத்தளத்தில் உறுப்பினர் ஆகினால் மட்டுமே இந்த மென் பொருளை உங்கள் கணினியில் டவுன்லோட் செய்ய முடியும்.

□ இந்த முறையில் நீங்கள் உங்கள் மென்பொருளை புதிய கணினியில் மாற்றும் போது நாம் செய்து வைத்திருந்த செட்டிங்க்ஸ் கூட மாறாமல் வரும் என்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சம்.

□ இந்த மென்பொருளை டவுன்லோட் செய்ததும் இந்த மென்பொருளை இயக்கினால் நீங்கள் புதிய கணினிக்கு மாற்ற வேண்டிய மென்பொருட்களை தேர்வு செய்து கொண்டு அதன் ரெஜிஸ்ட்ரியை அப்படியே புதிய கணினியில் நிறுவினால் அந்த மென்பொருள் உங்களின் புதிய கணினியில் வந்து விடும்.

## பேஸ்புக் கைப்பேசிகள்

சமூக வலைத் தளங்கள் மத்தியில் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட பாவனையாளர்களை தன்னகத்தே கொண்டு அசைக்க முடியாத அரசனாக பேஸ்புக் திகழ்கின்றது.

இத்தளமானது HTC நிறுவனத்துடன் இணைந்து தனது உற்பத்தியில் உருவாக்கப்பட்டு வரும் கைப் பேசிகளை அறிமுகப் படுத்துவதற்கு தயாராகி வருகின்றது. Opera UL எனும் பெயரைத் தாங்கி வரவுள்ள இக்கைப்பேசிகள் Android 4.1.1 Gelly Bean இயங்குதளத்தினைக் கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுவருகின்றது. இக்கைப்பேசிகள் 1280 x 720 Pixels Resolution கொண்ட HD தொடுதிரையினை உள்ளடக்கியதாகவும், 1.4 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processorஇனையும் கொண்டுள்ளது.



மேலும் இக்கைப்பேசிகளில் Adreno 305 graphic தொழில் நுட்பமும் உள்ளடக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## Skype இல் புதிய வைரஸ்

கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களை பரப்பி விடும் Hackers, தற்போது Skype Program இன் புதிய வசதி மூலம் வைரஸை பரப்பி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. Skypeஇன் Messageஇல்"lol is this your new profile pic?" என்ற செய்தி வந்து, அதனை நீங்கள் கிளிக் செய்வதன் மூலம் வைரஸ் உங் கள் கணனிக்குள் புகுந்து விடுகிறது. இதன் மூலம் Hackers, குறித்த கணனியை தங்கள் கட்டுப் பாட்டில் வைக்க முடியும்.

இது குறித்து ஆய்வாளர்கள், தாங்கள் இந்த வைரஸின் தாக்கம்குறித்து அறிந்திருப்பதாகவும், விரைவில் இதற்கான தீர்வு கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.




மேலும் சமீபத்தில் வெளியான புதிய Skype பதிப்பை பயன் படுத்துமாறும் பயனாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## எண்ணங்களால் கட்டுப்படுத்தக்கூடிய கணனி

மனித எண்ணங்களினால் கட்டுப் படுத்தக்கூடிய கணனியை கண்டு பிடித்துள்ளதாக வொஷிங்டன் பல் கலைக்கழக மாணவர்கள் அறிவித் துள்ளனர்.


இக்கணனியானது உடலினை அசைக்கமுடியாத மற்றும் பேச முடி யாதவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமென தெரிவிக்கப்படுகின்றது. இது மூளையில் ஏற்பட்ட காயம் அல்லது பக்கவாதத்தினால் பேச்சை இழந்தவர்களுக்கும் பயன்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள வொஷிங் டன் மருத்துவ கல்லூரி டாக்டர் எரிக் லுத்தார்ட், மருத்துவ வராலாற்றில் இது ஒரு மைல் கல்லென வும் மனிதர்கள் மனதில் நினைப்பதினை எதிர்வு கூறக்கூடியதாக உள்ளமை மிகப்பெரிய வெற்றியெனவும் தெரிவிக்கின்றார்.

இச் செயற்பாடானது எலக்ட்ரோகோர்டியோகிரபி முறையிலேயே நடை பெறுகின்றது.

## ஐபோன்களை சார்ஜ் செய்வதற்கான நவீன சாதனம்




பலவகையான புதுமைகளை தன்னகத்தே கொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்று வரும் கைப்பேசிகளுள் முதன்மை வகிப்பது அப்பிள் நிறுவனத்தால் அறி முகப்படுத்தப்பட்ட ஐபோன்களே ஆகும்.

இவற்றை சார்ஜ் செய்வதற்கென Charge Card என்று அழைக்கப்படும் நவீன சாதனம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. 2.54mm தடிப்புக் கொண்ட இந்த நவீன சாதனமானது யு.எஸ்.பி இணைப்பு மூலம் செயற்படக் கூடியதுடன், எளிமையாக இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு சிறிய அளவுடையதாகவும், பாரம் குறைந்ததாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

## மது அருந்துவதை விட மோசமானது கணனி உபயோகிப்பது

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் வயர் இணைப்பு இல்லாத இணைய வசதிகளுடன் கூடிய கணனிகள் ஆகியவை மனித உடல்நலத்திற்கு பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவை.

இதனால் பாடசாலைகளில் அவற்றை பயன்படுத்த உடனடியாக தடை விதிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன.



ஐரோப்பிய கூட்டமைப்பு கழகங்கள் நடத்திய ஆய்வில் இவைகளால் குழந்தைகளுக்கு பெரும் ஆபத்து விளையும் என தெரியவந்துள்ளது.


புகைபிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றை விட கைத்தொலைபேசிகள் மற்றும் கணனிகளால் பெரும் ஆபத்து ஏற்படக் கூடும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலைகளில் இவற்றின் பயன்பாட்டிற்கு தடை விதிக்கவும் திட்டமிட்டுள்ளன. இருப்பினும், இதற்கு எம்.பி.க்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்

## நவீன தொழில்நுட்பத்துடன் iMac

கணனி உற்பத்தியில் முதல்வனாகத் திகழும் அப்பிள் நிறுவனம் தனது புதிய உருவாக்கத்தில் அமைந்து iMac கணனிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இவை முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கணனிகளிலும் பார்க்க, மிகவும் மெல்லிய தோற்றத்தை (ultra thin) கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது இவற்றின் தடிப்பானது வெறும் 5 மில்லி மீற்றர்களாக காணப்படுகின்றது. இது முன்னைய கணனிகளின் தடிப்பை காட்டிலும், 80 சதவீதம் குறைந்த அளவாகக் காணப்படுகின்றது. மேலும் இவை 21 அங்குலம் மற்றும் 27 அங்குலமுடைய திரைகளைக் கொண்டுள்ளதாக வெளிவர இருப்பதோடு, Core i5, Core i7 ஆகிய Processor களை உள்ளடக்கியுள்ளன.




தவிர, இவற்றின் துணை நினைவகமானது SSDஅல்லது Fusion Driveஇனை அடிப்படையாகக் கொண்டு காணப்படுவதோடு, பிரதான நினைவகமான RAMஇன் Memory அளவை 32GB வரை அதிகரிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கணனிகள் எதிர் வரும் டிசம்பர் மாதமளவில் விற்பனைக்கு வரலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது.

# குடாக்கடலில் முறைதவறிய மீன்பிடி; சட்டத்தின் பிடியில் 30 பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

ஒருவருடகாலத்திற்குள் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபட்ட 30 படகுகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அனுமதியின்றி இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி கடல்அட்டை பிடித்தது, தங்கூசிவலை பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபட்டமை இழுவைப்படகினைப் பயன்படுத்தி இழுவைப்படகுத் தொழிலில் ஈடுபட்டது சம்பந்தமாகவே இந்த 30 படகுகளின் மீதும்,அதில் கடற்தொழிலில் ஈடுபட்டவர்கள் மீதும் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றப்பணம் அறவிடப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடற்படையினராலும் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களஅதிகாரிகளினாலும் இவ்வாறு பிடிக்கப்பட்ட படகுகள் யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றத்திலும் ஏனைய நீதிமன்றங்களிலும் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவும் யாழ். கடற்தொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகுறிப்பிட்டார். (பா)

# காரைநகரில் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

காரைநகரில் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச பொறுப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் தெரிவித்துள்ளார்.



காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் அதிகமாகத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் பொது இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட சபை எதிர்க்கட்சித் தலைவர் மேற்படி இடங்களில் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இக்குழாய்க்கிணறுகள் மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதித்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபா நிதிஒதுக்கீட்டில் 14 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதிக்கு விமோசனம் எப்போது கிடைக்கும்

(குருநகர்)

யாழ். ஐந்தாம் குறுக்கு வீதி 30 வருடங்களுக்கும் மேலாகத் திருத்தப்படாமல் இருந்து வருவதால் குன்றும் குழியுமாக இருந்து வருகிறது.

வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகள் வாகனாதிகள் தினமும் சொல்லொணச் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றிலும் அமைந்துள்ள பிரதான வீதி, 1ஆம்,2ஆம் 3ஆம் 4ஆம் ஆறாம் குறுக்கு வீதிகள், மாட் டீன் வீதி, மடம் வீதி, ஆஸ்பத்திரி வீதிகள் அனைத்தும் காப்பெற் வீதிகளாக மாற்றமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அவற்றிற்கு நடுவே அமைந்துள்ள 5ஆம் குறுக்கு வீதி மட்டும் இன்னமும் ஓரவஞ்சம் காட்டப்படுவதுபோன்று கைவிடபபட்டதன் மர்மம் அறியாமல் மக்கள் விழிக்கின்றனர்.

இவ் வீதியின் நிலைமையைச் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலதடவை சுட்டிக்காட்டியும் இன்னமும் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் புறக்கணிக்கப்பட்டுவருவதாகப் புகார் கூறப்படுகிறது. (68)

# நேரடி அஞ்சல்

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டியை முன்னிட்டு நாளை மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் சூரசம்கார நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எவ்.எம். சேவையில் நேரடியாக அஞ்சல் செய்வதைக் கேட்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (60)

# மடம் வீதியை புனரமைக்கவும்

(குருநகர்)

யாழ். பிரதான வீதியால் மடம் வீதிக்குச் செல்லும் முடக்கு வீதிப்பகுதி செப்பனிடப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் படையினர் காவலரன் அமைத்திருந்த அரச மரத்தைத் தாண்டியே பிரதான வீதியை வந்தடைந்து மேற்கே செல்லவும், பிரதான வீதியால் மடம் வீதிக்குச் செல்லவும் வேண்டி ஏற்பட்டுள்ளது.

முன்னர் நாற்சந்தியான அப்பகுதியில் குறிப்பிடப்படும் முடக்குத் திருப்ப வீதி அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இடவசதி அமைந்திருந்தும் வீதியைச் செப்பனிடாததால் போக்கு வரவில் சிரமங்கள் ஏற்பட்டு வருவது சுட்டிக்காட்டத்தக்கது. (68)



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களக்கான கௌரவிப்பு வைபவம் நேற்று வித்தியாலயத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்திய சீலன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (படம் கே.நந்தகுமார்)

# பதிவிறக்கப் பெட்டகம்

கேள்வி: "ஒருவர் அரசியல்வாதியாக என்ன தகுதி வேண்டும்?"

**வின்ஸ்டன் சேர்ச்சில்:** "நாளை, அடுத்த மாதம், அடுத்த வருஷம் என்னென்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே சொல்லத் தெரிய வேண்டும். பிறகு, அது ஏன் நடக்கவில்லை என்பதற்கான விளக்கம் சொல்லவும் தெரிந்திருக்க வேண்டும்."

---

ஒருவரை எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

**பெஞ்சமின் ஃப்ராங்ளின் பதில்:** "ஒன்று படிக்கத்தக்க விஷயங்களையே எழுதுங்கள். அல்லது எழுதத் தகாத விஷயங்களைச் செய்யுங்கள்." (இரண்டையும் செய்தவர் கண்ணதாசன்.)

---

"இங்கே யாரும் இங்லீஷ் தெரிந்த கற்பழிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா?"

– கொங்கோ யுத்தத்தில் தப்பிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்த பெல்ஜிய அகதிகளிடம் பி.பி.ஸி. தொலைக் காட்சி நிருபர்.

---

"பெண்கள் அரசியலில் பங்கேற்பது என்பது ஆண்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதை ஒத்ததுதான். இரண்டுமே இயற்கைக்கு முரணானவை; நடைமுறையில் சாத்தியப்படக் கூடியவை அல்ல" என்று கூறிய புருதோன் என்பவருக்கு, 1832–ல் பிரான்சில் 'பெண்ணின் விடுதலை' என்ற இதழை வெளிக்கொணர்ந்தவர்களில் ஒருவரான **ழான் தெர்வான் கூறிய பதில்:** "குழந்தைகளுக்கு பாலூட்டுவதென்னவோ பெண்களால் மட்டும்தான் முடியும். பெண்களின் உடலமைப்பு அப்படி. ஆனால் நாடாளுமன்றத்தில் ஆண்கள்தான் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்ற வாதம் விநோதமானது. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டிய தகுதி ஆண்களுக்கு மட்டுமே உரிய உறுப்புடன் சம்பந்தப்பட்டதா என்ன?"

---

கேள்வி: நீங்கள் அடக்கமான பெண்ணா?

**அருந்ததி ராய் பதில்:** ஆம். ஆனால் எனது அடக்க விதிமுறைகளை நானே உருவாக்குகிறேன். மற்றொருவருடைய விதிமுறைகள் என்னுடையதல்ல.

---

நடிகன் என்பவன் யார் என்ற கேள்விக்கு **மார்லன் பிராண்டோ பதில்:** "தன்னைப் பற்றிப் பேசவில்லை என்றால் கவனிக் காத ஆசாமி."

---

கேள்வி: இலக்கிய உலகில் 'என் வாரிசு' என்று யாரைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?

**ஜெயகாந்தன்:** வாரிசாவது கீரிசாவது? நான் பாரதியாரின் வாரிசு என்று சொல்லிக் கொள்கிறேன். அவர் என்னை உருவாக்கினார் என்றா பொருள்? இலக்கியவாதிகள் தானாக உருவாக வேண்டும்; உருவாக்க முடியாது.

---

"ஹிந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும். ஏனென்றால் இந்தியாவில் அதிக மக்கள் பேசும் மொழி ஹிந்தி" என்று இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தில் அமைச்சர் ஒருவர் சொன்னதற்கு, **அண்ணாத்துரை அவர்களின் பதில்:** "இந்தியாவில் காக்கைகள்தான் எண்ணிக்கையில் அதிகம். பிறகு ஏன் மயிலை தேசியப் பறவையாக வைத்திருக்கிறீர்கள்?"

---

"ஏன் தோற்றுத் திரும்பினீர்கள்?" என்று இந்திய அமைதிப்படையின் தளபதி **ஜெனரல் கல்கட்டி**டம் கேட்டபோது அவர் சொன்ன பதில்: "எங்களுக்கு யார் எதிரி, யார் நண்பன் என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை."

---

மரணத் தறுவாயில் "உலகுக்கு நீங்கள் சொல்லும் கடைசி செய்தி என்ன?" என்று கேட்டதற்கு **கால் மார்க்ஸ்** கூறியதாகச் சொல்லப்படும் பதில்: "மூடனே வாயை மூடு. தான் வாழும் போது உலகுக்கு எந்த செய்திகளையும் சொல்லாத முட்டாள்கள்தான் இறக்கும்போது கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டும்."

---

இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எங்காவது உயிர்கள் இருந்தால் அவை மனிதர்களை விட மேம்பட்டவையாக இருக்குமா என்ற கேள்விக்கு, ஒரு **நாஸா விஞ்ஞானி**யின் பதில்: "இந்தப் பிரபஞ்சத்தில் புத்திசாலியான உயிர்கள் இருக்கின்றன என்பதன் நிரூபணம், யாரும் நம்மை இதுவரை தொடர்பு கொள்ளவில்லை என்பதுதான்!"

# சமாதானத்தின் சுவை மக்களுக்குத் தெரியும் 13 ஆம் திருத்தம் அகற்றினால் அது சிதையும்

சமாதானத்திற்கான காலம் கனிந்துள்ள இந்த வேளையிலே ஒரு கெட்ட சகுனம் போல 13 ஆவது திருத்தச் சடடத்தை நீக்குவதைப் பற்றிய கதைகள் வருகின்றன.

இந்தச் செய்தி வெளியாகத் தொடங்கிய நாள் முதல் சிறுபான்மைச் சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டத்திலே ஒரு பதட்டமும் அச்ச நிலையும் ஏற்பட்டுள்ளது.

நீணட காலமாக பல நெருக்கடிகளைச் சந்தித்த இந்த மக்கள் தங்களுடைய அரசியற் தீர்வை 13 ஆவது திருத்தத்தில் இருந்து ஆரம்பிக்கலாம் என்று எதிர் பார்த்து இருந்தனர்.

ஆனால் அந்த எதிர்பார்ப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது. உண்மையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு விரும்பும் எவரும் இத்தகைய முறையில் சிந்திக்க மாட்டார்கள்.

இன நல்லிணக்கம், அதிகாரப் பரவலாக்கம், அரசியற் தீர்வு போன்ற விடயங்களில் ஆரம்பப் புள்ளிகளை இன்னும் நாம் சரியான முறையில் உருவாக்கவில்லை.

இந்த நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது என்பது எந்த வகையிலும் ஏற்கக்கூடியதும் அல்ல. அதேவேளை அது இந்த நாட்டிற்கு நல்லதும் அல்ல. இதனை நன்றாக உணர்ந்த பலரும் இன்று இந்த சட்ட மூலத்தை நீக்குவதற்கான தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இந்த திருத்தத்தை நீக்கினால் சமாதான சூழல் சிதைந்து விடும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தெரிவித்தார். வரவு - செலவுத் திட்டம் மீதான உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்

கௌரவ சபாநாயகர் அவர்களே!

நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி சிந்திக்கும் நாம் நாட்டினுடைய அமைதியைப் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

எமது நாட்டிற்கு அபிவிருத்தியானது எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு அமைதியும் தேவையானது. அமைதி இல்லாத ஒரு நிலையினால் எமது கடந்த காலத்தில் எவ்வளவோ வளங்களை நாம் இழந்திருக்கிறோம்.

எமது மக்கள் ஏராளமான துன்பங்களை அனுபவித்ததும் அமைதியில்லாத காரணத்தினால் தான். எமது நாடு பெரும் நெருக்கடிகளை சந்தித்ததும் அமைதியில்லாத காரணத்தினாலேயே.

ஆகவே அமைதியும் சமாதானமும் இன்று எமக்கு மிக மிகத் தேவையான ஒன்றாகிவிட்டது. அமைதியும் சமாதானமும் ஒரு நாட்டின் இரண்டு கண்களைப் போன்றவை. நாங்கள் அமைதியை எட்ட வேண்டும் என்றால், இன நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் இன நல்லிணக்கததை உருவாக்க வேண்டும் என்றால் பகை மறப்பை ஏற்படுத்த வேண்டும்.

இந்த வரவுசெலவுத் திட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே வேளை இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி இனப் பிரச்சனையின் தீர்வுக்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல தொடக்கமே. இதனை நாம் பாராட்டி வரவேற்கிறோம். ஆகவே, இந்த நல்ல ஆரம்பத்தை அடிப்படை யாகக் கொண்டு அமை திக்கான வழிகளை நாம் திறக்க வேண்டும்.

நீண்ட கால நெருக்கடிகளுக்குப் பின்னர், இன்று மலர்ந்துள்ள புதிய சூழல நிரந்தர அமைதிக்கான விதைகளை விதைப்பதற்கு ஏற்றதாக உள்ளது.

ஆகவே நாம் எல்லோரும் இந்தச் சூழலைப் பொறுப்போடு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த மன்றிலே நான் ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பெரும் போராட்டங்களின் மத்தியிலே, பேரழிவுகளின் மத்தியிலே, பல்லாயிரக் கணக்கான உயிரிழப்புகளின் மத்தியிலே, ஒரு போர் முடிவுக்கு வந்துள்ளது. ஆகவே சமாதானத்தின் ருசியை மற்றெல்லோரையும் விட நாங்களே அதிகம் அறிந்தவர்கள்.

எங்களைப் போல போர் நிலைக்குள் சிக்கிய சமூகங்கள் பல நிரந்தர அமைதிக்கு திரும்பியுள்ளன. ஏனென்றால் சமாதானத்தின் பெறுமதியை அதிகமாக அறிந்தவர்கள் அவர்கள் தான்.

வரலாற்றின் இந்த அறைகூவலை நாங்கள் புறக்கணிக்க முடியாது. அப்படி அதை நாம் புறக்கணித்தால் அது வரலாற்றிற்கு நாம் இழைக்கும் துரோகம் ஆகும். இந்த சந்தர்ப்பத்திலே, இந்த மனறிலே நான் ஒரு விடயத்தை அழுத்திக் கூற விரும்புகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

எமது மக்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் இயல்பு நிலை என்றால் என்ன என்று அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்களைச் சுற்றியிருந்த நெருக்கடியிலிருந்து மீண்டு சுதந்திரமான முறையில் தொழில்

முயற்சிகளை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக தொழில் முயற்சிகளை மேற்கொள்வோருக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லை வரை உதவிகளும் சலுகைகளும் தேவை. அப்படியான உதவிகள் கிடைக்கும் போதுதான் அவர்களால் அந்தத் தொழிற்துறையில் மேம்பாட்டைக் காண முடியும். அப்போது தான் அந்த தொழிற்துறையும் வளர்ச்சிய டையும். நாடு முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்றால், நாங்கள்



உற்பத்தியாளர்களை அதிகரிக்க வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த வரவுசெலவுத் திட்டத்திலே உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வாய்ப்பாக எமது உற்பத்தியாளர்கள் கொள்ள வேண்டும்.

அதேவேளை உற்பத்தியாளர்களுக்கான உத்தரவாதத்தினை எமது அரசாங்கம் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்றார்.

# சர்வதேச சட்டங்களை மீறும் இலங்கையின் கடல் தொழிலாளர்கள்

## கடும் தொனியில் சாடுகிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

சர்வதேச கடல் சட்டங்களை இலங்கைக் கடற்தொழிலாளர்கள் பலர் மதித்து நடக்காமல் உதாசீனம் செய்து வருவதாகவும் இதனால் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேணடியேற்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோதமான, முறையற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதில் ஒத்துழைக்கத் தவறினால், இந்த எட்டு நாடுகளையும் கறுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள நேரிடும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

பனாமா, பெலிஸ், கம்போடியா, பிஜி, கென்யா, டோகோ, இலங்கை, வனாட்டு ஆகிய நாடுகளுக்கே ஐரோப்பிய ஒன்றியம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அனைத்துலக சட்டங்களுக்கு அமைய செயற்படத் தவறினால், இந்த நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன்பிடி ஆணையாளர் மரியா டமனாகி எச்சரித்துள்ளார்.

கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.



அத்துடன் இந்த நாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான கால அவகாசத்தை வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

ஆனால் அந்தக் காலப் பகுதிக்குள் முன்னேற்றத்தைக் காண்பிக்காது போனால், ஐரோப்பிய ஒன்றியம் வர்த்தக நடவடிக்கை தொடர்பான தீர்மானத்தை நிறை வேற்றும்படி கேட்டுக் கொள்ளப்படும் என்றும் மரியா டமனாகி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாடுகளுக்கு விடுக்கப் பட்டுள்ள இநத எச்சரிக்கை ஒரு மஞ்சள் அட்டையே என்றும், அதற்கடுத்த கட்டமாகவே கறுப்புப்பட்டியலில் உள்ளடக்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# புலிகளின் மனிதக் கேடயம் ஐ.நா. அறியாதது அல்ல

## மௌனம் காத்தது ஏன் என்கிறார் ரோஹித்த



(முல்லைத்தீவு)

ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் தமது கடமையைச் செய்திருந்தால் பெருமளவான பொதுமக்கள் உயிரிழப்புக்களைத் தடுத்திருக்கலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்டமை குறித்து ஐ.நா.வுக்கு நன்கு தெரியும்.

2007 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த உத்தியைப் பயன்படுத்திக் கெண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த தந்திரோபாயம் பற்றி ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிந்திருந்த போதிலும், உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமான முறையில் பொதுமக்களைத் தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்ற அரசாங்கத்தின் முறைப்பாட்டை ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனத்திற் கொள்ளத் தவறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் பணியாளர்களைக் கடத்திச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் எவரும் அதற்கு கண்டனம் வெளியிடவில்லை என பொகொல்லாகம சுட்டிக் காட்டியுள்ளார்.





சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நெல்லியடி கிளை அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதில் கிளையின் புதிய லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட லயன்ஸ் கழக 306 B-1 இன் ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா மன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வதையும், புதிய லயன்ஸ் கழக உறுப்பினர்கள் இணைந்து பிரதம விருந்தினருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் காணலாம். (01)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**தமிழ்மொழியும் இலக்கியமும்** | 22 | T | I |

ஆசிரியர் : S.S. ஆனந்தன்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) ஞாயிறே, இருளை என்ன செய்து விட்டாய்? ஞாயிறு என்பதன் பொருள்
1) சந்திரன் 2) வாரம் 3) கிழமை 4) சூரியன்

02) "மேனி கொதிக்குதடி - தலைசுற்றியே வேதனை செய்குதடீ" இங்கு மேனி என்பதன் ஒத்த கருத்து
1) ஆகாயம் 2) உடம்பு 3) மேகம் 4) வெப்பம்

03) "அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல் நான் கிழவன்" இங்கு நாண் என்பதன் பொருள்
1) வெட்கம் 2) கயிறு 3) வில் 4) நடு

04) பழையதைச் சற்றும் விடாமலும் புதியதை முற்றும் வேண்டாமலும் இருத்தல் சாத்தியமன்று. இங்கு சாத்தியம் என்பதன் எதிர்க்கருத்து
1) தீர்க்கக்கூடியது 2) அசாத்தியம்
3) சரதம் 4) உண்மை

05) தாய் பாலகனுடன் ஊருக்குச் சென்றார். பாலகன் என்பதன் பெண்பாற் சொல்லாவது,
1) பாடகி 2) பாலகை 3) பாலகி 4) பாலதை

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06) நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி
1) ஆவணம் 2) பத்திரம் 3) அடமானம் 4) பிடிமானம்

07) பலாவின் பிஞ்சு மூசு என்பது போல மாவின் பிஞ்சு
1) மூசு 2) கச்சல் 3) வடு 4) வடலி

08) அறிஞர் கூட்டத்தை அவை என்று கூறுவது போல உடு
1) கூட்டம் 2) திரள் 3) குழாம் 4) குழு

09) கொண்டல், மேகம், முகில் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
1) கார் 2) ஆகாயம் 3) தென்றல் 4) கருமை

10) சங்கு, புற்று, வளைதல் என்ற சொற்கள் தரும் பொருள்
1) பொந்து 2) வளை 3) இருப்பிடம் 4) குகை

11) தாய் தன் மகனின் வருகைக்காக காத்திருத்தலைக் குறிக்கும் அருஞ்சொற்றொடர்
1) வெள்ளிடை மலை 2) வழி மேல் விழி வைத்து
3) ஆசைகாட்டி மோசஞ் செய்து 4) தெல்லும் வகையால்

12) குமரன் வங்கியில் "மனேஜராக" (Manager) கடமை புரிகிறான். இங்கு மனேஜர் என்ற சொல்லின் தமிழ்ச்சொல்
1) ஊழியன் 2) எழுத்தாளன்
3) எழுதுவினைஞன் 4) முகாமையாளர்

13) ஆடு மேய்ப்பவன் இடையன் எனப்படுவது போல யானை செலுத்துபவன்
1) ஆயன் 2) வலவன் 3) பாகன் 4) மாலுமி

14) நிறுத்தற் குறிகளில் விட்டிசைக்குறி எனப்படுவது
1) - 2) . 3) :- 4) ,

15) ஆமணக்கு முத்து போல சோளம்
1) மணி 2) விதை 3) பருப்பு 4) கொட்டை

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16) அவள் அவனைக் கேட்டதாகத் தெரியவில்லை. சலனமற்றுக் கிடந்தாள். சலனம் என்பது
1) மயக்கம் 2) அசைவு 3) நேர்மை 4) தெளிவு

17) அமலன் சிறு வயதில் இருந்தே வாலாட்டுவான். வாலாட்டுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து
1) மகிழ்தல் 2) சேட்டை பண்ணுதல்
3) உலகம் பிடிபடல் 4) வால் வீசுதல்

18) மனதில் தீய எண்ணம் எண்ணிக் கொண்டு வெளியே வேறு விதமாகப் பேசுதல் என்ற கருத்தைத் தரும் பழமொழி.
1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2) உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல்.
3) உலகம் பல விதம்.
4) ஈர நாவிற்கு எலும்பில்லை.

19) ஓர் ஊருக்கு ஒரு வழியா என்ற பழமொழியில் உட்கருத்து
1) நீதி எங்கும் ஒரு மாதிரியாக அமைய வேண்டும்.
2) கடல் திடலாகும். திடல் கடலாகும்.
3) ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
4) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

20) கள்வரிடம் அகப்பட்ட குமரன் துடிதுடித்தான் என்ற கருத்தைத் தரும் உவமைத்தொடர்.
1) மீகாமன் இல்லாத மரக்கலம் போல
2) ஏழை சொல் அம்பலம் ஏறாமை போல
3) வலையிற் சிக்கிய மான் போல
4) வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போல

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21) நெட்டெழுத்து அமைந்த சொல்லாவது
1) தயிர் 2) ஞாயிறு 3) தலை 4) கண்

22) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை
1) பாலன் பாட்டுப் பாடினான் 2) மாலதி படித்தாள்
3) குமரன் பந்தை எறிந்தான் 4) நேற்று குமரன் வந்தான்

23) அவன் கிராமத்தவரோடு சென்றான். இங்கு கிராமத்தவரோடு என்பது,
1) 3 ஆம் வேற்றுமை 2) 4 ஆம் வேற்றுமை
3) 5 ஆம் வேற்றுமை 4) 6 ஆம் வேற்றுமை

24) தொழில்+ நுட்பம் இதனைச் சொற்புணர்ச்சி விதிக்கமையப் புணர்த்தினால் வருவது,
1) தொழினுட்பம் 2) தொழில்நுட்பம்
3) தொழிநுட்பம் 4) தொழில்னுட்பம்

25) பயற்றங்காய் என்ற சொல்லிற் காணப்படும் சாரியை
1) அம் 2) அற்று 3) காய் 4) பயறு

26) ஆசிரியனால் நூல் எழுதப்பட்டது என்ற வாக்கியத்தில் எழுதப்பட்டது என்பது
1) எதிர்மறைவினை 2) பிறவினை
3) செய்வினை 4) செயப்பாட்டுவினை

27) தரப்பட்ட சொல் வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
1) பெயர்ச்சொல் - மனிதன், கோட்டை, பாடல்
2) வினைச்சொல் - உண்டேன், ஓடியது, ஓடும்
3) இடைச்சொல் - மற்று, உம், தோறும்
4) உரிச்சொல் - சால, உறு, சும்மா

28) கொடியிடை, முத்துப்பல், பவளவாய், கண்மலர் இவற்றுள் உவமை அல்லாதது,
1) கண்மலர் 2) கொடியிடை 3) பவளவாய் 4) முத்துப்பல்

29) ஊறல், ஏறல், சாரல் - இவற்றுள் வந்துள்ள தொழிற்பெயர் விகுதி.
1) உளறு 2) ஏறு 3) அல் 4) சாரல்

30) பின்வருவனவற்றுள் விளித்தொடருக்குப் பொருத்தமான உதாரணம்.
1) பரதன் வந்தான் 2) வந்தான் பரதன்
3) வந்த பரதன் 4) பரதா வா

எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க

31)
1) சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.
2) சபையில் கொண்டு வரப்பட்ட பிறேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.
3) சபையில் கொண்டு வரப்பட்ட பிறேறனை ஏற்றுக் கொல்லப்பட்டது.
4) சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்லப்பட்டது.

32)
1) அனேகமாகக் காலை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
2) அநேகமாகக் காளை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
3) அநேகமாகக் காலை வேழையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.
4) அநேகமாகக் காலை வேளையில் அவர்கள் இருக்கமாட்டார்கள்.

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பிற்பகுதியைத் தெரிவு செய்க.**

33) கமலினியும், விமலினியும் பல விடயங்களில்
1) ஒத்திருக்கின்றோம் 2) ஒத்திருக்கின்றீர்
3) ஒத்திருக்கின்றீர்கள் 4) ஒத்திருக்கின்றனர்

34) சில சினிமாப் பாடல்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து

1) காணப்பட்டது 2) காணப்படுகின்றன
3) காணப்படுகின்றது 4) காணப்படுகின்றவை

35) பூஞ்சோலையில் உள்ள ஒவ்வொரு பூவும்

1) அழகானவை 2) அழகானது
3) அழகுடையன 4) அழகாயிருக்கின்றன

பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் காட்டப்பட்ட சொல்வரிசையைத் தெரிவு செய்க.

36)

1) திணைக்களம், பெறுமை, துணிவு, வெறுமை
2) கனிவு, வடமொழி, வெக்கம், மருமகள்
3) ஆராய்ச்சி, புலம்பல், தோணி, காய்ச்சல்
4) நிகழ்ச்சி, அறநெறி, மெய்ஞ்ஞானம், அனுசரணை

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

37) விளையாட்டுப் போட்டி பற்றிய .............................. சமர்ப்பிக்கும்படி அதிபர் கூறினார்.

1) முடிவு 2) சுருக்கம் 3) பிரசாரம் 4) அறிக்கை

38) வங்கித்துறையில் சிலர் ...................... அடிப்படையில் வேலை செய்கின்றனர்.

1) ஒப்பந்தம் 2) உச்சவரம்பு 3) ஒப்படை 4) வேதனம்

39) ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் சனத்தொகை ......... செய்யப்பட்டது.

1) மதிப்பீடு 2) கணிப்பீடு 3) ஆய்வு 4) ஆராய்ச்சி

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40) அ. பெரும்பாலான புற மதத்தாரால் நடாத்தப்பட்டன.
ஆ. அதற்குக் கல்விச்சாலைகள் கருவியாகவும் இருக்கின்றன.
இ. கல்விச் சாலைகள் பல நமது நாட்டில் இருக்கின்றன.
ஈ. அதனால் நமது சிறுவரை சமய நெறியிற் பயில்வதற்கு கல்விச் சாலைகள் வேண்டும்.
உ. புற மதத்தாருடைய முதல் நோக்கம் தமது மதத்தைப் பரப்புவது.

1) இ, அ, உ, ஆ, ஈ 2) ஆ, ஈ, இ, உ, அ
3) இ, ஆ, உ, அ, ஈ 4) உ, ஆ, ஈ, அ, இ

## பகுதி II

1) சுருக்கமான விடை எழுதுக

1. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக. நாவின லுனுதினம் புகழ்வாம்
2. அவன் இன்று குறிப்புக்களை எழுதினான். இதனை எதிர்மறை வாக்கியமாக எழுதுக.
3. தான், ஆக என்ற இடைச்சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.
4. பின்வருவனவற்றுள் விரித்து எழுதும் போது வளர்க்க வேண்டிய ஆற்றல்கள் இரண்டு எழுதுக. மேலோட்டமாக எழுதல், சிறந்த மொழி வளம், சுருங்கிய விடய ஞானம், ஐயந்திரிபற்ற விளக்கம்.
5. பின்வரும் சொற்களில் வினைமுற்றுக்களை வேறுபடுத்தி எழுதுங்கள். நடந்தான், கடிதத்து, ஆடுகிறான், அழுது, படித்து, நடித்தாள்.
6. தந்தியடி, சுட்டிக்காட்டு, வெற்றியடை, தட்டிக்கேள் இவற்றை எவ் கூட்டு வினை என வகைப்படுத்துக.
7. தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
8. அங்கதம் என்பதற்கு விளக்கம் தருக.
9. பெயர்ச் சொற்கள் ஆறு வகையையும் எழுதுக.
10. கடல், பாம்பு என்ற சொற்களுக்கு ஒரு பொருட் பல சொற்கள் வீதம் ஒவ்வொன்றிற்கும் மும்மூன்று உதாரணம் தருக.

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கங்கள் இடுக.**

அ) விஞ்ஞானம் மனித குலத்தை ஆக்கப் பாதையில் இட்டுச் செல்கிறது. அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது என்ற கருத்தினைக் கொண்டு விளக்கக் கட்டுரை.

ஆ) பூரண நிலாப் பொழுது அன்று கடற்கரையில் நீர் கண்ட காட்சிகளும், உமது மனப் பதிவுகளும் பற்றிய வர்ணனை.

இ) உண்மைகள் என்றும் அழியாது. என்றோ ஒரு நாள் உலகிற்குத் தெரியும். தெரியும் வரை எத்தனையோ சிக்கல்கள், தடுமாற்றங்கள் என்பவற்றைக் காட்டும் வகையில் ஒரு சிறுகதை.

ஈ) எமது ஒழுக்கம் பேண சமய வளர்ச்சியே தேவை. சமயம் மக்களை வாழ்வாங்கு வாழ வழி காட்டுகிறது. சமயத்தைப் பின்பற்றுபவன் தவறு செய்வது குறைவு என்ற கருத்தமைய சொற்பொழிவு.

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடைவதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வம் கல்விச் செல்வம், பொருட் செல்வம் என இரு வகைப்படும். பொன், மணி முதலிய பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வம் சிறந்தது. ஏனெனில், கல்விச் செல்வம் அழியாது. பொருட் செல்வம் பங்காளிகளால் பகுத்து எடுக்கப்படும். கள்வர், கயவர், பகைவர் என்போரின் வௌவுதலுக்கு உட்படும். பொருட் செல்வம் வெந்தழலால் சாம்பராகிவிடும். அண்டினோர்க்கு அளித்தால் குறையும். எனவே, பொருட் செல்வம் அளியும் தன்மையுடையது. அத்தோடு அது தக்காரிடத்து மட்டுமல்ல தகவிலர் இடத்தும் உண்டாகி நிலைபெறாது. அத்துடன் இது பலரைப் பகையுடையவராக்கும். பொருள் ஈட்டலால் துன்பப்படுவர் பலர். கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது. தீ வெள்ளம் முதலியவற்றால் நாசமுறாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் கூடும். இது ஒருபோதும் அழியாது. கல்வியோ கரையில்லாதது. எனவே, எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. பாலும், நீரும் கலந்து இருக்கும்போது பாலை மட்டும் தனித்துக் குடிக்கும் அன்னப்பறவை போன்று நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருட்களையும் உணர்த்தும் நூல்களைத் தெரிந்து கற்றல் வேண்டும்.

**04) பின்வரும் பந்தியை வாசித்து கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

உலகில் பல வகையான ஆற்றல்கள் உள்ளன. இந்தப் பரந்த அண்டமே ஆற்றலின் வடிவம் என்று கிடக்கிறது. நமது கண்ணில் படுகின்ற ஒவ்வொரு பொருளும் ஆற்றலின் மாற்று உருவமே. எல்லா வகையான ஆற்றல்களும் இயக்க ஆற்றலையோ அல்லது நிலை ஆற்றலையோ சார்ந்துள்ளன. வெப்பம் ஒரு வகை ஆற்றல் ஆகும். எல்லாப் பொருளிலும் வெப்ப ஆற்றல் உண்டு.

1. இப்பந்தியின் பிரதான கருத்து யாது?
2. அனைத்து ஆற்றல்களும் எவ்வகை ஆற்றல்களைச் சார்ந்துள்ளன?
3. நாம் காணும் பொருளுக்கும், ஆற்றலுக்கும் உள்ள தொடர்பு என்ன?
4. ஆற்றல் ஒன்றுக்கு உதாரணம் தருக.
5. வெப்ப ஆற்றல் எவற்றில் உண்டு?

**05) புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டமே சிறந்தது என்பதை விளக்கி 100 சொற்களில் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.**

அல்லது

**நாம் ஒவ்வொருவரும் மரம் நடுகையில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் துண்டுப்பிரசுரம்.**

# பலதும் பத்தும்

- குழந்தைகள் பிறந்து பொதுவாக நான்கு மாதங்கள் வரையில் பலமாக அழுதாலும் கண்ணீர் வெளியேறுவதில்லை. கண்ணீர் சுரப்பிகள் முழு அளவில் விருத்தி அடையாமையே இதற்குக் காரணம் ஆகும்.

- தண்ணீரை உறைய வைத்துப் பனிக்கட்டியாக மாற்றுவதைப் போல, திரவ உலோகமான பாதரசத்தையும் உறைய வைத்துத் திண்மம் ஆக்க முடியும். ஆனால் பூச்சிய வெப்ப நிலையையும் தாண்டி, மேலும் 39 பாகை செல்சியசுக்குக் கீழாகக் ($39^0C$) குளிர்விக்கும் போதுதான் உறையத் தொடங்கும். உறைந்த பாதரசம் நீலப்பிரகாசமுடைய வெள்ளி நிறமாக இருக்கும்.

- நாய்க்குட்டிகள் பிறக்கும்போது குருடாகவும், செவிடாகவும், மண நுகர்ச்சி அற்றவையுமாகவே பிறக்கின்றன. பார்வைப்புலன், செவிப்புலன் மற்றும் மணநுகர்ச்சிப்புலன் விருத்தி அடைவதற்கு நாய்க்குட்டிகளுக்குப் பொதுவாக இரண்டு வாரங்கள் ஆகின்றன. அதுவரை முற்றுமுழுதாகத் தாய் நாயையே நம்பியிருக்கின்றன.

- பூமியில் தற்போது ஒரு நாள் என்பது 24 மணித்தியாலங்கள். ஆனால் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் - டைனோசர்கள் உலாவித் திரிந்த காலத்தில் ஒரு நாட்பொழுது என்பது வெறும் 16 மணித்தியாலங்கள்தானாம். இந்த நாள் அளவை, அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த பவளப் பாறைகளை ஆதாரமாகக் கொண்டு கண்டறிந்திருக்கிறார்கள்.

- தற்காலத்தில் சிலந்தி என்று அழைக்கப்படும் உயிரினம் சங்க காலத்தில் சிலம்பி என்றே கூறப்பட்டுள்ளது. வேடனின் வலையில் இருந்து தப்பி வந்த புறா கருவேல மரத்தில் சிலம்பியால் பின்னப்பட்ட வலையைக் கண்டு பயந்ததாகச் சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் பதிவாகியுள்ளது.

# அரசுக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையா? அதனையும் எதிர்கொள்ள நாம் தயார்

## நிதியமைச்சர் முழக்கம்



(புதுடில்லி)

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் மத்திய அரசுக்கு எதிராக, நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டால், அதைச் சந்திக்க தயாராக உள்ளோம் என, நிதி அமைச்சர் சிதம்பரம் கூறினார். மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் அளித்த பேட்டி:


நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர், வரும், 22ஆம் திகதி தொடங்குகிறது. நான்கு வாரம் மட்டுமே, இந்தக் கூட்டத் தொடர் நடக்கவுள்ளது. இதில், சில முக்கியமான மசோதாக்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.இன்சூரன்ஸ் மசோதா, வங்கி ஒழுங்குமுறை சட்ட திருத்த மசோதா ஆகியவை, இதில் முக்கியமானவை. எந்தவித இடையூறும், அமளியும் இன்றி, இந்த மசோதாக்களை நிறைவேற்ற வேண்டும் என, அரசு தரப்பில் விரும்புகிறோம்.

இதற்காக, அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளோம். பிரதமர் மன்மோகன் சிங், இதுகுறித்து, அரசியல் கட்சி தலைவர்களுடன் ஏற்கனவே, பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மேலும் சில கட்சிகளுடனும், பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.நிறைவேற்றப்படவுள்ள மசோதாக்களால், நாட்டுக்கும், மக்களுக்கும், அதிகமான பயன் உண்டு. தற்போதைய நிலையில், நாட்டின் பொருளாதாரம், மிகவும் சவாலானதாக உள்ளது. இதை சீரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை மோசமடைந்துள்ளதாக, இன்று கூட செய்திகள் வெளியாகியுள்ளன. நமக்கு அந்த அபாயமான சூழல் இல்லை. தற்போது நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 5.5 சதவீதமாக உள்ளது. இன்னும் சில மாதங்களில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, திருப்தி அளிக்கும் வகையில் அதிகரிக்கும்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில், அரசு தரப்புக்கு நெருக்கடி கொடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. எந்த சூழ்நிலை வந்தாலும், அதை எதிர்கொள்வதற்கு, அரசு தயாராக உள்ளது. அரசுக்கு எதிராக, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும், அதைச் சந்திக்க தயார். லோக்சபா தேர்தல் முன்கூட்டியே நடப்பதற்கு வாய்ப்பு உண்டா என, கேட்கப்படுகிறத் கண்டிப்பாக, அதற்கு வாய்ப்பு இல்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, தன் பதவிக் காலம் முழுவதையும் பூர்த்தி செய்யும். இவ்வாறு சிதம்பரம் கூறினார்.

## ஒளிக்கற்றை ஏலம் அரசுக்கு நல்ல பாடம்




KAPIL SIB


"2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு ஏலத்தின் மூலம், மிகப்பெரிய பாடம் கிடைத்துள்ளது் கொள்கை முடிவுகள் எடுப்பதை அரசின் வசம் விட வேண்டும்," என, அமைச்சர் கபில் சிபல் கூறினார். மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், கபில் சிபல், ஆகியோர் நேற்று டில்லியில் நிருபர்களை சந்தித்தனர். அப்போது, அமைச்சர் கபில் சிபல் கூறியதாவது: "2ஜி"ஸ்பெக்ட்ரத்தை, ஏலம் விட்டதன் மூலம், அரசுக்கு, 9.4 ஆயிரம் கோடிதான் கிடைத்துள்ளது. பல்வேறு தொலைத் தொடர்பு வட்டங்களில், 2ஜி ஸ்பெக்ட்ரத்தை ஏலம் எடுக்க யாரும் முன் வரவில்லை. ஸ்பெக்ட்ரம் போன்ற இயற்கை வளங்களை, என்ன செய்வது என்பதெல்லாம், அரசு பரிசீலிக்க வேண்டிய கொள்கை விஷயம்.

தற்போதைய ஏலத்தில், குறைந்த தொகை மட்டுமே, அரசுக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது. உண்மை நிலை இவ்வாறு இருக்க, ஏலத்தில் விட்டிருந்தால், கோடி கோடியாய் இலாபம் கிடைத்திருக்கும் என, கூறியது, எந்தளவுக்கு உண்மை என்பதை, இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும். 2 ஜி ஸ்பெக்ட்ரத்தை ஏலம் விட்டதன் மூலம், மிகப்பெரிய பாடம் கிடைத்துள்ளது.

இந்தியச் செய்திகள்




## கூடங்குளத்துக்கு ஆதரவு சைக்கிள் பேரணி இன்று



கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உடனடியாக மின் உற்பத்தியைத் தொடங்கக் கோரி, காங்கிரஸ் சார்பில் இன்று சைக்கிள் பேரணி நடைபெறுகிறது.

இது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில அமைப்புச் செயலரும், காங்கிரஸ் நட்பகம் அமைப்பாளருமான க.ராமலிங்கஜோதி, திருநெல்வேலியில் செய்தியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியில்

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு காங்கிரஸ் மாநில நிர்வாகிகள் ஒன்றுகூடி கூடங்குளம் அணுமின் நிலைய ஆதரவு சைக்கிள் பேரணி நடத்த முடிவு செய்துள்ளோம்.

தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் பெற்றிட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அவசியத்தை வலியுறுத்தி, இந்தப் பேரணி நடைபெறுகிறது. திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் இருந்து நவம்பர் 18ஆம் தேதி காலை 9 மணியளவில் பேரணி தொடங்குகிறது.

பேரணியை திருநெல்வேலி மக்களவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.எஸ்.ராமசுப்பு தொடங்கி வைக்கிறார். முன்னாள் மத்திய இணையமைச்சர் ஆர்.தனுஷ்கோடி ஆதித்தன், காங்கிரஸ் தொண்டர்களுக்கு சைக்கிள் வழங்கிப் பேசுகிறார். காங்கிரஸ் நூற்றாண்டு விழாத் தலைவர் எஸ்.கே.டி.ராமச்சந்திரன் மற்றும் இந்நாள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்கின்றனர் என்றார்.

## சுகாதாரத் துறையின் பின்னடைவு இந்தியாவை அச்சுறுத்துகிறது



இந்தியாவில் சுகாதார அமைப்பு சீர்கெட்டு விட்டது என்று மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

டில்லியில் ஆங்கில நாளிதழ் ஒன்று நடத்தும் தலைமைத்துவம் குறித்த மாநாட்டில் மத்திய ஊரக வளர்ச்சித்துறை மந்திரி ஜெய்ராம் ரமேஷ் 16.11.2012 வெள்ளிக்கிழமை கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:- இன்று கிராமப்புறங்களில் கடன்கள் பெருகியிருப்பதற்கு மிக முக்கிய காரணம், உடல் நலக்குறைவால் ஏற்படுகிற செலவினம்தான். இந்தியாவில் சுகாதார அமைப்பு கெட்டுப்போய் விட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

உலகிலேயே இந்தியாவில்தான் 70 சதவீத மருத்துவ செலவு தனியார் துறைக்கு போகிறது. இதில் இந்தியா தனித்துவம் பெற்ற நாடாக திகழ்கிறது.

நமது நாட்டில் பல பகுதிகளில் பொது சுகாதார அமைப்புகள் (அரசு ஆஸ்பத்திரிகள்) இல்லை. உலகமெங்கும் பல நாடுகளில் சுகாதாரத்துறையில் செலவுகளை அதிகரிக்கும் பிரச்சினை குறித்து விவாதித்து வருகின்றனர்.

உடல் ஆரோக்கியம் பேணும் விஷயத்தில் மாநிலங்கள் நிறுவனங்களை தேர்ந்தெடுக்கவும், அந்த தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களின் பங்களிப்புக்கும் அரசு அடிப்படை உறுதி அளிக்க வேண்டும்.இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வலுவாக உள்ளனர். இவர்கள் நிறுவனங்களில் வலுவாக பங்கு பெறுகின்றனர். இவர்கள் சமூகத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்துகின்றனர்.

சிசு மரணம் என்ற வகையில் பார்த்தோமானால் இந்தியாவை விட வங்காளதேசமும், கென்யாவும் நம்மை விட மேம்பட்ட நிலையில் உள்ளன. சுகாதார வசதிகளிலும் நம்மை விட சிறப்பாக உள்ளன. இதற்குக் காரணம் பெண்களுக்கு அதிகாரம் வழங்கி இருப்பதுதான். இந்தியா போன்ற பணக்கார நாடுகளை விட அவர்கள் நல்ல பலனை அளிக்கின்றனர். இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

## ராகுல் பிரதமர் வேட்பாளரா? வியூகம் வகுக்கிறது காங்கிரஸ்

ராகுல் பிரதமராக வரவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் என மத்திய அமைச்சர் கூறினார். 2014ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலையொட்டி ராகுலை பிரசார ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக காங். நியமித்தது. இந்நிலையில் மத்திய அமைச்சர் பேனிபிரசாத் வர்மா, ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் நடந்த நிகழ்ச்சியில் பேசியதாவது: வரப்போகும் நாடாளுமன்ற லோக்சபாதேர்தலை எதிர்நோக்கிட ராகுலை பிரசார ஒருங்கிணைப்புக்குழு தலைவராக காங். மேலிடம் நியமித்துள்ளது. இதன் மூலம் அவர் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படலாம். அவர் அடுத்த பிரதமராக வரவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். அதனை நாட்டு மக்கள் விரும்புகின்றனர். தற்போது பா.ஜ.வில் குழப்பமான சூழ்நிலை நிலவுகிறது. அக்கட்சியின் தேசிய தலைவரான நிதின் கட்காரி அவரிடம் உள்ள கருப்பு பணத்தை வெள்ளையாக மாற்றவே போலி நிறுவனங்களை அமைத்து முறைகேடு செய்துள்ளார். சல்மான் குர்ஷீத்மீது அரவிந்த் கெஜ்ரிவால். கூறிய குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இவ்வாறு வர்மா கூறினார்.


### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இந்திய மருத்துவர் மரணம் மர்மம் துலங்குமா?

## கவனம் திரும்புகிறது அயர்லாந்து பக்கம்





கருக்கலைப்பு மறுக்கப்பட்ட நிலையில் இந்திய பெண் டாக்டர் சவீதா ஹாலப்பனாவர் அயர்லாந்து மருத்துவமனையில் மரணம் அடைந்தார். இதனைக் கண்டித்தும், அந்நாட்டின் கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களைத் திருத்த வேண்டும் எனக் கோரியும் அயர்லாந்தின் பல்வேறு நகரங்களில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

அயர்லாந்து அரசின் சுகாதாரத் துறை அதிகாரிகள் சவீதாவின் மரணம் குறித்து உயர்மட்ட விசாரணை நடத்தி வருகின்றனர். கருக்கலைப்பு சட்ட விரோதமானது என்ற கொள்கையின் அடிப்படையில் பெண்களின் உரிமை பறிக்கப்படுவதை இனியும் நாம் அனுமதிக்கக் கூடாது என்று அயர்லாந்து நாடாளுமன்றத்தில் துணை பிரதமர் ஈமன் கில்மோர் நேற்று பேசினார். சவீதாவின் மரணம் தொடர்பாக அயர்லாந்து அரசிடம், இந்திய தூதரகம் விளக்கம் கேட்க தீர்மானித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து நேற்று கருத்துக் கூறிய மத்திய வெளியுறவுத்துறை மந்திரி சல்மான் குர்ஷித்,"குழந்தையின் உயிரை காப்பாற்ற முடியாவிட்டாலும், தாயின் உயிருக்காவது முக்கியத்துவம் கொடுத்து சவீதாவைக்காப்பாற்றி இருக்கலாம். அயர் லாந்து அரசு நடத்திவரும் விசாரணை, உலக நாடுகளின் நுண்ணாய்வுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்காவில் மர்ம மரணம் இந்திய குளிர்பானம் காரணமா?

(நியூயார்க்)

அமெரிக்காவில், சிலர் மர்மமான முறையில் இறந்தது குறித்து, இந்திய நிறுவனத்தின் சக்தி பானத்தை, அதிகாரிகள் பரிசோதித்து வருகின்றனர்.உத்தரபிரதேச மாநிலம், லக்னோவை சேர்ந்தவர், மனோஜ் பார்கவா,59. இவரது நிறுவனம் அமெரிக்காவில் 5 ஹவர் எனர்ஜி என்ற பெயரில் சக்தி பானத்தை விற்பனை செய்து வருகிறது.

கடந்த, நான்கு ஆண்டுகளில், 13 பேர், மர்மமான முறையில் இறந்தனர். இவர்கள் இறப்புக்கு, சில சக்தி பானங்கள் தான் காரணம் என கூறப்பட்டது.அமெரிக்காவின் பிரபல பாக்ஸ் நியூஸ் நிறுவனம், மர்ம சாவுகளுக்கு, 5 ஹவர் எனர்ஜி, பானம் காரணமாக இருக்கலாம் எனச் செய்தி வெளியிட்டது. இதையடுத்து, இந்த நிறுவனத்தில், அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.இதுகுறித்து, பார்கவா கூறியதாவது: சில செய்தி நிறுவனங்கள், பரபரப்புக்காக, மர்ம சாவுக்கு எங்கள் கம்பெனியைக் காரணம் காட்டியுள்ளன. இது முட்டாள் தனமானது. எங்களது தயாரிப்பில் காபியில் உள்ளது போன்ற "காபின்" என்ற வேதி பொருள் உள்ளது. காபின் உடலுக்கு நல்லது தான். இதனால், மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என்ற கருத்து அடிப்படை இல்லாதது.இவ்வாறு பார்கவா கூறினார்.

# ஹமாஸ் தளபதி படுகொலை இஸ்ரேல் மீது பதிலடி

## எதிர்த்தாக்குதலில் 20 பேர் பலி

(காசா)

பலஸ்தீனத்தின், காசா நகரத்தின் மீது, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதில், 20 பேர் பலியாகினர்.பலஸ்தீனத்தின், ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த வாரம், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதில் மூன்று பேர் பலியாகினர். இதையடுத்து, இஸ்ரேல் இராணுவம், காசா நகரத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், ஹமாஸ் அமைப்பின் தளபதிகளில் ஒருவரான, அகமது ஜபாரியும் அவரது கூட்டாளியும் கொல்லப்பட்டனர்.இதற்குப் பதிலடியாக, ஹமாஸ் தீவிரவாதிகள், மீண்டும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், பலஸ்தீனர்கள், 20 பேர் கொல்லப்பட்டனர் ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர் பல வீடுகள் தரைமட்டமாயின. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கிடையே நடக்கும், இந்தச் சண்டையால், இங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளது.இந்நிலையில், எகிப்து நாட்டின் பிரதமர், ஹிஷாம குவாண்டில், காசாவுக்குச் சென்று, இஸ்ரேல் தாக்குதலில் காயமடைந்தவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினார். பலஸ் தீனத்தின் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலை தடுத்து நிறுத்தும் படி, அவர் உலக நாடுகளிடம் கோரியுள்ளார்.



# வெடித்தது குண்டு உயிர்ப்பலி இதுவரை 17

மேற்கு ஆப்கானிஸ்தானில், சாலையோரம் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டுகள் வெடித்ததில் 17 பேர் உயிரிழந்தனர்.

ஃபரா மாகாணத்தில் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. பக்கத்து கிராமத்தில் நடந்த திருமணத்தில் பங்கேற்க மினி பஸ்சில் இவர்கள் சென்றபோது ஃபரா மாகாணத்தில் உள்ள ஒரு இடத்தில் சாலையோரம் வைத்திருந்த குண்டுகள் வெடித்தன. இதில் 17 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

மேலும் 14 பேர் படுகாயமடைந்ததாக மாகாண செய்தித் தொடர்பாளர் அப்துல் ரஹ்மான் ஜீவந்தாய் தெரிவித்தார்.

# நாடாளுமன்றம் கலைப்பு தேர்தலுக்கு தயாராகிறது ஜப்பான்



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, அடுத்த மாதம் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில், ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியில் உள்ளது.அணு சக்தி நிலையங்களை மூடுதல், சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் அளிக்காதது உள்ளிட்ட பிரச்சினைகளால், எதிர்க்கட்சியினர், தொடர்ந்து புகார் கூறி வந்தனர். இதனால், ஆளும் கூட்டணியிலும் பிரச்சினை ஏற்பட்டது. இது வரை, ஆறு பிரதமர்கள் மாற்றப்பட்டு விட்டனர்.சமீப காலமாக, ஜப்பானுக்கும், சீனாவுக்கும் இடையே தீவு தொடர்பாக பகைமை வளர்ந்து வருகிறது. இந்த விஷயத்தில், உரிய தீர்வு காணாதது குறித்தும், பொருளாதார மேம்பாட்டுக்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளாதது குறித்தும், ஆளும் கட்சி மீது புகார் கூறப்பட்டது.

நாளுக்கு நாள் பிரச்சினை வலுத்து வந்ததால், ஜப்பான் பிரதமர் யோஷி ஹிகோ நோடா, நாடாளுமன்றைக் கலைக்கப் போவதாக எச்சரித்தார். இதன் படி, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றின் கீழ்சபை கலைக்கப்பட்டது.அடுத்த மாதம், 16ஆம் திகதி, தேர்தல் நடக்க உள்ளது. இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பு, விரைவில் வெளியிடப் பட உள்ளது.

# பி.பி.சி.யின் நம்பகத்தன்மைக்கு ஆப்பு




குழந்தையைப் பாலியல் பலாத்காரம் செய்ததாக தவறான செய்தி வெளியிட்டதற்காக பி.பி.சி நிறுவனம் பிரிட்டிஷ் அரசியல்வாதி ஒருவருக்கு 1,85,000 பவுண்ஸ் இழப்பீடு வழங்கியுள்ளது. பிரிட்டனின் கன்சர்வேடிவ் கட்சியின் பொருளாளராக உள்ள அலிஸ்டர் மெக்ஆல்பைன் என்பவருக்கு இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாக பி.பி.சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தையைப் பாலியல் பலாத்காரம் செய்ததாக மெக்ஆல்பைன் குறித்த செய்தியை பிபிசி வெளியிட்டது. இது குறித்து தொடரப்பட்ட மான நஷ்ட வழக்கில், தாங்கள் தவறுதலாகச் செய்தி வெளியிட்டுவிட்டதாக பி.பி.சி ஒப்புக் கொண்டு நஷ்ட ஈடு வழங்க முன்வந்துள்ளது.

இழப்பீட்டுத் தொகையுடன் வழக்கு நடத்தியதற்கான செலவுத் தொகையையும் சேர்த்து வழங்கப்படும் என்று பி.பி.சி தெரிவித்துள்ளது. பி.பி.சிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் மிக விரைவில் தீர்வு கிட்டியுள்ளது என்று தெரிவித்த மெக்ஆல்பைன், இந்தச் செய்தியை இணையதளங்களில் வெளியிட்ட பிற நிறுவனங்கள் மீது தொடரப்பட்ட வழக்கிலும் விரைவில் தீர்ப்பு கிடைக்கும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

நியூஸ்நைட் நிகழ்ச்சியில் இந்தச் செய்திக்கு ஏற்கெனவே வருத்தம் தெரிவித்துள்ளது பி.பி.சி. வேல்ஸ் பகுதியில் ரெக்ஸ்ஹாம எனுமிடத்தில் குழந்தையைப் பாலியல் பலாத்காரம் செய்ததாக செய்தி வெளியானது. இந்தச் செய்தியில். மெக்ஆல்பைனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இணையதளங்களில் அவரது பெயர் குறிப்பிடப்பட்டு செய்தி வெளியானது. இந்த நிகழ்ச்சியால் பி.பி.சி அளிக்கும் செய்தியின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

# அந்த அன்பு மடல் உறங்கியது ஏன்?

ஜெர்மன் நாட்டிலிருந்து, அனுப்பப்பட்ட கடிதம், 49 ஆண்டுகளுக்கு பின், பிரிட்டனில் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.ஜெர்மனியின், பான் நகருக்கு அருகே உள்ள பேட் காடஸ்பெர்க்கிலிருந்து, 1963ஆம் ஆண்டு, மார்ச் 13இல், ஒரு கடிதம், பிரிட்டனில் உள்ள பேனா நண்பருக்கு அனுப்பப்பட்டது. இந்தக் கடிதம், 49 ஆண்டுகளுக்கு பின், கடந்த மாதம் 29ம்தேதி, பிரிட்டனின், பெர்க்ஷயர் பகுதியில் உள்ள டெரிக் லெவிசுக்கு, கிடைத்துள்ளது.

இதுகுறித்து, லெவிஸ் கூறியதாவது: ஜெர்மனியில் உள்ள கட்ரன ரெண்ட்ராப் என்ற பெண்ணும், நானும், 17 வயதிலிருந்து பேனா நண்பர்களாக இருந்தோம். அவளது தந்தையின், பிரிட்டன் வருகை குறித்து எனக்கு எழுதிய கடிதம் தான், இப்போது என் கையில் கிடைத்துள்ளது.

இந்தக் காலத்தில், அஞ்சல் குறியீட்டு எண் நடைமுறையில் இல்லை. கடிதம் தாமதமாக கிடைத்ததற்கு இது ஒரு காரணமாக இருக்கும் என, நினைக்கிறேன். இவ்வாறு, லெவிஸ் கூறினார். இந்தத் தபால் 49 ஆண்டுகள் தாமதமாக விநியோகிக்கப்பட்டதற்கு நாங்கள் காரணமில்லை என, றோயல் மெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.



**ஸ்பெயின் வந்திருந்த போர்த்துக்கல் அதிபர் கவேக்கோ சில்வா, அவரது மனைவி மரியாகவேக்கோ ஆகியோரை காட்டீஸ் நகர் விமான நிலையத்தில் ஸ்பெயின் அரசு உயரதிகாரிகள் வரவேற்றனர்.**

# பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்திற்கு பான்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆகியோரின் இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிஒதுக்கீட்டின் கீழ் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்திற்கு பான்ட் வாத்தியக் கருவிகளை ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இராமநாதன் ஐங்கரன் பாடசாலை சமூகத்திடம் கையளித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும், கோப்பாய் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவருமான இராமநாதன் ஐங்கரன், இப்பாடசாலை சமூகம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க பான்ட் வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இப்பாடசாலையின் ஏனைய தேவைகள் படிப்படியாக பூர்த்தி செய்யப்படுமென்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அச்சுவேலி பத்தமேனி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவலிங்கம், ஈ.ழமக்கள் ஜனநாயகக் கட்சியினரைப் பொறுத்தவரை எதைச் சொல்லுகின்றார்களோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் தேவையென கேட்டிருந்தோம் அவர்கள் இன்று வைத்தியர் ஒருவரை நியமித்ததுடன், வைத்தியசாலை மலசலகூடம் திருத்துவதற்கு 3 இலட்சம் ரூபா நிதியினை பெற்றுத் தந்திருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச அமைப்பாளர் தர்மராசா, வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் சந்திரபோஸ், அச்சுவேலி பத்தமேனி கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பயன்பாடு இன்றி பொதுச்சந்தை; பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவில்லை



(வவுனியா)

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பொதுச்சந்தை பயன்பாடு இன்றி காணப்படுவதாகவும் இது தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச சபை கவனம் செலுத்தி அதனை இயங்கச்செய்ய வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல இலட்சம் ரூபா செலவில் சேவாலங்க நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட இச் சந்தை கட்டடத்தொகுதியானது மக்கள் பாவனைக்கு உட்படாது மூடப்பட்டுள்ளமையினால் அது சேதமடையும் நிலையில் உள்ளதாகவும் அதனைச் சீரமைத்து மக்கள் பாவனைக்கு விடுவதற்கு பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேசசபையின் உப தலைவரிடம் கேட்டபோது, இச்சந்தை மக்கள் பாவனையின்றிக் காணப்படுவது உண்மையெனவும் அதற்கான நடவடிக்கையை பிரதேசசபை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

# கட்டாக்காலி கழுதைகளுக்கு மன்னாரில் பிறக்கும் விழவுகாலம்

(மன்னார்)

மன்னாரில் கடந்த 200 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்ற சுமார் 500 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி கழுதைகளிடமிருந்து உச்சப்பயனைப் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை நடத்தப்படுகிறது.

இது தொடர்பில் மன்னார் நகரசபை கடந்த 5 மாதங்களாக ஆலோசனை செய்து வருகின்றது.

இதற்காக அவுஸ்ரேலியா டயஸ்போரா லங்கா அமைப்பின் உதவி கோரப்பட்டது. இது தொடர்பில் பல வெளிநாட்டு ருகவளர்ப்பு சங்கங்களுடனும் கால்நடை பாதுகாப்பு வைத்தியர்களுடனும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிலையில், மன்னாரில் சுற்றித்திரியும் கட்டாக்காலி கழுதைகளுக்கு விடிவுகாலம் ஏற்பட்டுள்ளதாக மன்னார் டயஸ்போரா லங்கா அமைப்பின் பிரதிநிதி சின்கிலேயர் பீற்றர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் சுற்றித் திரியும் கட்டாக்காலி கழுதைகளிடமிருந்து பயன் பெறுவது தொடர்பில் இந்தியாவிலிருந்து 3 ஆலோசகர்கள் மன்னாருக்கு வருகைதந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பொதுமக்களிடம் கேள்விக்கொத்து மூலமாக கழுதைகளின் பயன்பாட்டைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ் ஆய்வின் மூலம் மன்னார் மக்களில் ஒரு சிலர் கழுதைகளின் பிரயோசனத்தை அறிந்துகொண்டதுடன், கழுதைகளை பராமரிப்பதன் மூலம் கழுதைகளின் உச்சப்பயனை பெறமுடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கழுதைகளின் வாய்க்கு கடிவாளம் இட்டு ஆடு, மாடு, குதிரைகள் போன்று பல வேலைகளுக்கு அதனை பயன்படுத்த முடியும்.

இதேவேளை கழுதையின் சாணம், நுளம்பு, கொசுக்கள், ஈக்கள் போன்றவற்றிற்கு எதிர்ப்புச் சக்தியாக உள்ளது. இவற்றை புகைமூட்டுவதன் மூலம் பாதுகாப்பளிக்க முடியும்.

இதனால் வேண்டப்படாத மிருகமாக ஒதுக்கி விடப்பட்ட மன்னார் கட்டாக்காலி கழுதைகளுக்கு ஓர் விடிவு காலம் பிறக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

# ராஜீவ் படுகொலையுடன் தொடர்பு எதுவும் இல்லை

## கூறுகிறார் கே.பி.

(கொழும்பு)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்துடன் தனக்கு எதுவித தொடர்பும் இல்லையென புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளரான குமரன் பத்மநாதன் (கே.பி.) தெரிவித்துள்ளார்.

'டெய்லி மிறர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும் இந்தியாவுடனும் நல்ல உறவுகளை பேணுமாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அவ்வியக்கத்தின் முக்கியஸ்தரான கிட்டுவிடம் தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் காசி ஆனந்தன், பொருளாதார வல்லுநர் அர்ஜுன சிற்றம்பலம் ஆகியோரின் மூலமாக இந்தியாவுக்கு சென்று ராஜீவ் காந்தியை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை கிட்டு மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்துடன் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பல்வேறு பிரிவுகள் இருந்தன. அடுத்த பிரிவில் வேறு எவரும் தலையிட முடியாது. தமிழகத்தில் இருந்து செயற்பட்டவர்கள் வேறு ஒருவரது தலைமையின் கீழ் செயல்பட்டனர்.

ராஜீவ் கொலை பற்றி எனக்கு மட்டுமல்ல லண்டனில் இருந்த கிட்டுவுக்கும் கூட எதுவுமே தெரிந்திருக்க வில்லை. ராஜீவ் காந்தியுடனும் இந்தியாவுடனும் நல்ல உறவை மேம்படுத்துமாறு கிட்டுவிடம் பிரபாகரன் கூறியிருந்தார்.

அதன் பிரகாரம் காசி ஆனந்தன், பொருளாதார வல்லுநர் அர்ஜுன சிற்றம்பலம் ஆகியோர் மூலமாக. இந்தியாவுக்கு சென்று. ராஜீவ் காந்தியை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை கிட்டு மேற்கொண்டிருந்தார் என்றார்.

## கூடங்குள...

அணு மின் உலையினால் தமிழ் நாட்டிற்கும், இலங்கைக்கும் வரவுள்ள கதிரியக்கப் பாதிப்புக்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் அந்த அணு உலைத்திட்டத்தைக் கைவிட வலியுறுத்தியே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் புதிய ஜனநாயக மாக்கிச லெனினிசக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் கூடங்குளம் அணுமின் திட்டத்தை எதிர்த்தும் அதனைக் கைவிட வலியுறுத்தியும் சுலோக அட்டைகளைக் கையில் ஏந்தியவாறும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் வரை நடைபெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கூடங்குளம் அணு உலை மக்கள் வாழ்வுக்கு ஆபத்து வேண்டாம் வேண்டாம், அணு உலை வேண்டாம் நிறுத்து நிறுத்து அணு உலையைநிறுத்து.

புதுடில்லிக்கு அபிவிருத்தி தமிழ்நாடு. இலங்கை மக்களுக்கு சுடுகாடு போன்ற சுலோகங்களை அவர்கள் ஏந்தியிருந்தனர். அத்துடன் அணு உலையின் பாதிப்புக் குறித்து துண்டுப்பிரசுரம் ஒன்றையும் அங்கு விநியோகித்தனர். மேலும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்கிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் செந்தில்வேல், செல்வம் கதிர்காமநாதன், சூழலியலாளர் ஐங்கரநேசன் உட்பட கட்சி உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் காரணமாக மேலதிக பொலிஸார் நகரில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நண்பகல் 12.00 மணிக்கு இந்தக் கவனீர்ப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது. (பா)

## அழுத்தம்...

யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபை பொதுமக்களை பாதுகாக்க தவறிவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், இதனைக் கொண்டு இலங்கையில் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் பல்வேறு ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் சபை சேகரித்துக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் இதனைக் கொண்டு எதிர்வரும் காலங்களில் இலங்கை மீது சர்வதேச நாடுகள் பல்வேறு அழுத்தங்களை கொடுக்க முடியும்.

எனினும் இது தொடர்பில் அரசாங்கம் அசட்டையாக நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## தமிழ் இளைஞர்...

அடையாளம் காணப்பட்டுள்ளார். சனிக்கிழமை இரவு தாக்குதலுக்கு உள்ளான ஞானகுமார் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிறு அதிகாலை உயிரிழந்தார். இவரது முகத்திலும், தலையிலும் பலமான காயங்கள் இருப்பதாக பிரேத பரிசோதனை நடத்திய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நீர்வேலியில்...

குறித்த கிணற்றில் பாவனையாளர் ஒருவர் தண்ணீர் அள்ள முயன்ற போதே கிணற்று வாளியில் குறித்த சடலம் சிக்கிக் கொண்டதனையடுத்து கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு அந்தக் கிணற்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த பெண் நேற்று அதிகாலை நீர்வேலியிலுள்ள தனது மகளது வீட்டில் இருந்து வெளியே சென்றிருந்ததாகவும் தெரியவருகின்றது. (பா)

## பரிதி...

யமைப்புக்களில் விநாயகத்தின் வலையமைப்பு மிகவும் வலுவானது.

பரிதி கொலையுடன் இலங்கை அரசாங்கத்தை தொடர்புபடுத்த புலிகள் முயற்சித்ததாக சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. பரிதி கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்றாம் நபர் விநாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகம் 2009 ஆம் ஆண்டு போர் இடம்பெற்ற காலத்தில் ஐரோப்பாவிற்கு தப்பிச் சென்று, புலிகளின் வலையமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

# மீள்எழுச்சி கிராமங்களுக்கு முல்யாணி இந்திரவதி விஜயம்



நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ முல்யாணி இந்திரவதிக்கு யாழ்ப்பாணத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் குடாநாட்டிற்கு வருகைதந்த உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீமுல்யாணி இந்திரவதி தலைமையிலான குழுவினர் யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் அனுசரணையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் எழுச்சித் திட்டக் கிராமங்களுக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது நேற்றுக் காலை 10.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தில் வைத்து உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீமுல்யாணி இந்திரவதிக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அத்துடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களைப பார்வையிட்டதுடன் ஜனசக்தி மீள் எழுச்சித் திட்டக் கிராமத்தின் அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதார முன்னேற்றம் தொடர்பான கண்காட்சியையும் பார்வையிட்டார்.

இதன்போது பொருளாதரா அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (02)

# எட்டு இலங்கையர்கள் நாடு திரும்ப விருப்பம்

புகலிடம் கோரி படகு மூலமாக அவுஸ்ரேலியாவுக்கு சென்ற இலங்கையர்களில் மேலும் எண்மர், தமது சொந்த வீடுகளுக்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த எட்டுப் பேரும் ஆண்களாவர். அவர்களில் நவுறு தீவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஐவரும் அடங்குவதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து புகலிடக் கோரிகையாளர்களாக படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு வந்தவர்களில் 332 பேர் வலுக்கட்டாயமாக இதுவரையிலும் தாயகம் திரும்பியுள்ளனர் என்றும் அத்திணைக்களம் கூறியுள்ளது.

# 103 மேலதிக வாக்குகளால் 2 ஆம் வாசிப்பு நிறைவேற்றம்

2013 ஆம் வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 103 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இந்த மாத முதல் வாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு - செலவுத்திட்டம் வாதவிவாதங்களின் பின்னர் நேற்றையதினம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது 156 பேர் ஆதரவாகவும் 53 பேர் எதிராகவும் வாக்களித்தனர். 15 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன.

இதுதவிர, நாடாளுமன்றில் தனித்துச் செயற்படும் உறுப்பினர் அஜித் குமார மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் டிரான் அலஸ் ஆகியோர் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

# அறிக்கை பகிரங்கமானமை வரவேற்கிறது கனேடிய அரசு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை தொடர்பான உள்ளக அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதென கனடா அறிவித்துள்ளது. இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கம், மனித உரிமைப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் பிரதமர் ஸ்டீவன் ஹார்பரும், தாமும் கேள்வி எழுப்ப உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென அவர் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார். இலங்கை மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் குறித்து இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் பயார்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விடுதலைப் புலிக் கைதிகள் பூரண அறிக்கைக்கு உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப் புலிக் கைதிகள் தொடர்பில் பூரணமாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளார்.

தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல விடுதலைப் புலி உறுப்பினர்கள் பற்றிய விபரங்களையும் வெளியிடுமாறு அவர் கோரியுள்ளார்.

அண்மையில் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்தபோது தமிழ்க் கைதிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் சில கோரிக்கைகளை முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்தம் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமக்கு எதிராக வழக்குத் தொடராமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சில கைதிகள் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதிகள் தொடர்பில் துரித கதியில் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

# இராணுவத்தில் தமிழ் யுவதிகள் இணைப்பு அரசியல் கட்சிகளால் தவறான பிரசாரம்

## - கிளிநொச்சிக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)



இராணுவத்திற்கு தமிழ் யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பாக சில தமிழ் அரசியல் கட்சிகள் சர்வதேச ரீதியாக தவறான வதந்திகளைப் பரப்பி வருவதாக கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்துக்கு தமிழ் யுவதிகளை இணைத்துக் கொள்ளும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று கிளிநொச்சி, பாரதிபுரத்தில் அமைந்துள்ள இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

செட்டிக்குளம் நலன்புரி முகாமில் தங்கியிருந்த நிலையில் பரந்தன், நாச்சிக்குடா, பாரதிபுரம் மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட பிரதேசங்களில் மீள்குடியேறிய யுவதிகளில் சிலரே இவ்வாறு இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, மேற்படி 109 யுவதிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டதுடன் யுவதிகளின் பெற்றோர், தங்களது பிள்ளைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும் சம்பிரதாய நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது உரையாற்றுகையிலேயே கிளிநொச்சி கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டங்களை அனுபவித்து வந்த மேற்படி யுவதிகளுடனான சந்திப்பினை அடுத்தே அவர்களுக்கு இராணுவத்திலேனும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க தீர்மானித்தேன்.

இதற்கமைய தற்போது இராணுவத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு அதற்கேற்றவகையில் அவர்களில் சிலரை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தோம்.

இராணுவ சேவையில் ஈடுபடவுள்ள இந்த யுவதிகளுக்கு மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும். மேலதிக கொடுப்பனவுகளுடன சேர்த்து அவர்கள் மாதாந்தம் சுமார் 50 ஆயிரம் ரூபாவினை சம்பளமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுவதாக சில வதந்திகள் நிலவுகின்றன. இராணுவத்தில் 105 பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரேயொரு பிரிவு மாத்திரமே ஆயுதப் பயிற்சிபெற்ற பிரிவாக காணப்படுகின்றது.

இராணுவத்தின் தொழிற் படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள இவர்கள், இராணுவ மகளிர் படையின் 6 ஆவது படையணியின் கீழ் தொழிற்படவுள்ளனர். அதனால் அவர்களுக்கு ஆயுதப்பயிற்சிகள் வழங்கப்படமாட்டாது. இருப்பினும் இராணுவ பயிற்சிகள் கட்டாயம் வழங்கப்படும் என்றார்.

# குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க ஆறு வாரகால அவகாசம் தேவை

## - பிரதம நீதியரசர் வேண்டுகோள்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க, தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க கால அவகாசம் வேண்டுமென நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முதல்நாள் அமர்வின்போது, பிரதம நீதியரசரை எதிர்வரும் 23 ஆம் திகதி தெரிவுக்குழு முன் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டது.

அவ்அழைப்புக்குப் பதிலளிக்கும் வகையில் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க தனக்கு ஆறு வாரகால அவகாசம் தேவை எனத் தெரிவித்துள்ளார்.

# மாகாணமட்ட பொதுப் பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம்

(அச்சுவேலி)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இம்மாதம் நடத்தப்படவுள்ள தரம் 9 இற்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சை நேரசூசியில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு வலயக்கல்வி அலுவலகங்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இம்மாகாண மட்டப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் திட்டமிட்டபடி அன்றைய தினம் இடம்பெறாது எனவும் மறுநாள் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் 26 ஆம் திகதி வரை பரீட்சைகள் இடம்பெறும் என வும் தெரிக்கப்படுகின்றது.

இதேவேளை 19 ஆம் திகதி வரை திங்கட்கிழமை நடைபெறவிருந்த பாடங்கள் 26 ஆம் திகதி நடைபெறும் எனவும், ஏனைய பாடங்கள் ஏற்கனவே திட்டமிட்ட நேரசூசிக்கமைய அதே ஒழுங்கமைப்பில் நடைபெறும் எனவும் மேலும் தெரிவிக்கப்பபட்டுள்ளது. (03)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.